B

# கற்பகம்



ஏற்றுத் தொழிலின் எழுச்சி கண்டு
போற்றும் மங்கை பெருமை கொண்டு
ஆற்றும் தொழிலின் அருமை காத்தல்
சாற்றும் காட்சி தொழிலின் மாட்சி


சித்திரை 1986

விலை: ரூபா 2-50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சித்திரை - 1986*
*மலர் - 7*
*இதழ் - 3*

*வெளியீடு:*

**வடமாகாண**
**தெ. ப. பொ. கூட்டுறவு**
**சங்கங்களின் சமாஜம்**
**330, கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 22713**

*அட்டைப் படம்:*
**கே. ஆர். வி. வாசன்**
*அட்டைப்படக் கவிதை:*
**ஆ. ந. இராசேந்திரன்**

*வடிவமைப்பும் அச்சீடும்.*
**ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்**
**125A, ஸ்ரேசன் வீதி,**
**யாழ்ப்பாணம்**


# மக்கள் பண்பு மலரட்டும்!

மலருகின்ற புத்தாண்டில் துன்பகரமான ஒரு சூழ்நிலையில் 'கற்பகம்' வாசகர்களைச் சந்திக்கின்றோம். எமது பகுதிகளில் எமது உடன் பிறப்புக்களைத் தினம் தினம் இழந்து வரும் இந்த அவலச் சூழ்நிலையில் 'இப்புத் தாண்டு' பிறக்கின்றது. இப்புத்தாண்டிலாவது எமக்குப் புதுவாழ்வு கிட்டாதா என்று எம் மினம் ஏங்குவது எமக்குத் தெரிகின்றது. முன்பெல்லாம் ''வாண'' வெடிகளால் புத் தாண்டில் குதூகலம் பொங்கி வழியும். ஆனால் இன்று புத்தாண்டில் 'வான' வெடி கள் உயிர் குடிக்கின்றன. அப்பாவி மக்கள் 'அகதி' களாகின்றனர்.

தமிழ் மக்கள் மத்தியில் இன்று மிஞ்சியிருப் பது விரக்தியும், அவலமுமே. யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழ்ப் பகுதிகள் எங்கும் தினசரி நூற்றுக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டு வருவது வேதனைக்குரியது. இன்று தினசரிப்பத்திரிகை களில் இவற்றைத்தான் நாம் நாளாந்தம் காணுகின்றோம். ஜனநாயகம், மனித உரி மைகள் என்றெல்லாம் முழங்கித் தள்ளுகின் றார்கள். முன்னர் ஒரு முறை இப்பந்தியில் பேச்சும் செயலும் வேறுபட்டுக் காணப்படுவது பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். அப்பாவி மக் கள் இதுதானா ஜனநாயகம்? இது தானா மனித உரிமைகள்? என்று அங்கலாய்ப்பதும் எமக்கும் கேட்கிறது.

இன்றைய அவல நிலைக்கு அடிப்படைக் கார ணம் இனங்களுக்கிடையிலான புரிந்துணர் வின்மையும், துவேஷ உணர்வுகளுமேயாகும். பெரும்பான்மை இனம் சிறுபான்மைஇனத்தை ''ஆள'' முற்படும் போது இத்தகைய முரண் பாடுகள் தோன்றுவது இயல்பே. ஆயினும் சிறந்த ஜனநாயகப் பண்பு இம்முரண்பாடுகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமற் செய்து விடும். இப்போது நாட்டின் 'ஜனநாயக'ப் பஞ்சமே பேவுரழிவுகளுக்கெல்லாம் காரணமாக அமைந்து விடுகின்றது.

முரண்பாடுகளும், வேறுபாடுகளும் எப்போது ஒழிகின்றதோ அப்போதே இந்த 'இருள்' எம்மை விட்டு அகலும். முரண்பாடுகள், வேறுபாடுகளிடையே மனிதன் சிந்தனைகளையும் செயல்களையும் சமப்படுத்திக் கொள்கின்றான். குடும்பம் வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமைப் படுத்தப்படுகின்றது. சமூக வேறுபாடுகள், உலக நாடுகளுக்கிடையிலான 'இழுபறிகள்' கூட இணக்கம் காணப்பட்டுச் சமாதான உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகின்றன. இந்த நிலை இங்கும் ஏற்பட வேண்டுமென்றே சமூக நல விரும்பிகளும், சமாதானப் பிரியர்களும் விரும்புகின்றார்கள்.

தனிமனித பலவீனஉணர்வே அவன் சார்ந்துள்ள குடும்பம், சமூகம், இனம், மதம், தேசம் என்ற பரந்துபட்ட அமைப்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

''அரம் போலும் கூர்மையர் ஆயினும் மரம் போல்வர் மக்கள் பண்பு இல்லாதோர்'' என்ற வள்ளுவரின் வாக்குக்கு அமைய மக்கள் பண்புகளை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும், நட்பையும், பகைமையையும் ஒன்றாக மதிக்கும் நிலை, சொல்லையும் செயலையும் ஒன்றாகக் காட்டும் நிலை நாம் பெற விரும்புவதை, மற்றவருக்குக் கொடுக்கக் கூடிய மனநிலை, பொது நலத்தின் மீது சுயநலத்தைத் தியாகம் செய்யும் நிலை போன்ற மக்கள் பண்புகளை வளர்த்துக் கொள்வதின் மூலம் தான் அஞ்சி வாழும் நிலைக்கு 'ஆப்பு' வைக்க முடியும்.

கடந்த காலத் துன்பங்கள் நீங்கி அவை யாவும் பழையனவாகி இனி வரும் புத்தாண்டிலாவது தமிழ் மக்கள் வாழ்வில் 'இன்பம்' பிறக்குமா? இதனையே 'கற்பக'மும் வேண்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமாதானத்துக்கு உரமிட்ட வூட்ரோ வில்சனும் அரசியல் சிந்தனைகள் சிலவும்

இன்றைய காலகட்டத்தில் பல்வேறுபட்ட அரசியல் சூழ்நிலைகளில் வாழ்ந்தும் அனுபவித்தும் வரும் எமது தேச மக்கள் இற்றைக்கு நூறு ஆண்டுகளிற்கு முன் வாழ்ந்து மறைந்துபோன முதுபெரும் அரசியல் தலைவன் வூட்ரோ வில்சன் பற்றி அறிய வேண்டியதும் அவர்தம் அரசியல் சிந்தனைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டியதும் தவிர்க்கப்பட முடியாத அரசியல் நிலைப்பாடாகும்.

வர்ஜினியாவைச் சேர்ந்த ஸ்டான்டனில் டிசம்பர் மாதம் 28 ம் திகதி பிறந்து அமெரிக்காவின் 23 வது ஜனாதிபதியாக விளங்கி, உலக சகோதரத்துவக் கொள்கையை உரமிட்டு வளர்த்து உலக சமாதானத்தை உறுதிப்படுத்தவும், சக்தி வாய்ந்த சர்வதேச சபையொன்றை அமைக்க வேண்டுமென்ற விசுவாசமிக்க நல்லெண்ணத்துடன் செயற்பட்டு, உறுதிமிக்க உழைப்பினால் உடல் இளைப்படைந்து 1924 ம் ஆண்டில் உயிர் துறந்து விட்ட, உலகமக்களால் என்றுமே மறக்கப்படமுடியாத மகத்தான மனிதனே வுட்ரோ வில்சன் என்பவர்.

இன்று உலக சமாதானத்திற்காக குரல் கொடுக்கும் ஸ்தாபனங்களில் முக்கியமான ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்திற்கு இவரின் உழைப்பே உரமாக்கப்பட்டது என்றால் யாரும் மறுக்க முடியாது. உலக சமாதானத்திற்காக இவர் மேற்கொண்ட உழைப்பிற்காக 1919 ம் ஆண்டு சமாதான நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரின் நூற்றாண்டு தினமானது 1956 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் அமெரிக்காவில் மட்டுமன்றி உலகமெங்கும் நன்றியுடன் கொண்டாடப்பட்டது ஒரு மறக்க முடியாத நிகழ்வாகும். இந்த முதுபெரும் அரசியல் தலைவனின் அர

**தொகுப்பு: சுக்கிரன்**

சியல் சிந்தனைகள் சிலவற்றை எமது மக்களின் ஆய்வுக்காகத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வெளிநாட்டுக் கொள்கைபற்றி:-

(1) 1913 ல்; மக்களின் இதயங்கள் எங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் உயிர்கள் ஊசலாடும் நிலையில் எங்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் என்ன சாதனை செய்யப்போகின்றோம் என்று எதிர்பார்த்து தங்கள் நம்பிக்கையை மக்கள் எங்கள் மீது வைத்திருக்கின்றார்கள். இந்த நம்பிக்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப்போவது யார்? நிறைவேற்ற முயலாமல் இருக்கப்போவது யார்?

(2) 1917 ல்; நாங்கள் கடந்து விட்ட இன்னல்மிக்க சம்பவங்கள் எங்களை உலகப் பிரஜைகளாக்கிவிட்டிருக்கின்றன. இனி நாங்கள் வந்த வழியே திரும்பிச்செல்வது என்பது இயலாத காரியம். நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எங்கள் தேசத்தின் நலன்கள் உலக விவகாரங்களுடன் பிரிக்க முடியாதபடி இரண்டறக் கலந்துவிட்டன.

(3) 1918 ல்; எமது தேசத்தின் சக்தி எந்தத் தேசத்திற்கும் எந்த இன மக்களிற்கும் இன்னல் தராது. ஆக்கிரமிப்பிற்கோ சுயநல நோக்கங்களிற்கோ இந்தச்சக்தி பயன்படுத்தப்படமாட்டாது. சுதந்திரத்தில் பிறந்த இந்தச்சக்தி சுதந்திர சேவைக்கே அர்ப்பணமாகும்.

(4) 1917 ல்; மனிதகுல சகோதரத்துவம் என்பது வெறும் அலங்காரச் சொற்றொடர் அல்ல. உண்மையான சக்தியும், யதார்த்தமும் உடையது. ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து உலகினைக் காப்பாற்ற தேசங்கள் யாவும் ஒரு பொது வாழ்வை உணர்ந்து உருவாக்க வேண்டும். அதுவே உண்மையான சகோதரத்துவம்.

(5) 1920 ல்; சமாதானத்தை உறுதிப்படுத்த ஒரே மார்க்கம் இருக்கிறது. சமாதானத்தை குலைப்பதால் மகா அபாயமான விளைவுகள் ஏற்படக்கூடிய நிலைமையை உருவாக்கி சமாதானத்தைக் குலைக்கும் எண்ணமே எந்தத் தேசத்திலும் ஏற்படாமல் செய்வதே அந்த மார்க்கமாகும்.

❋ அரசியல் பற்றி:

(1) 1912 ல்; அரசியல் என்பது மேடைப்பிரசங்கம் செய்வதற்கு கிடைத்த சந்தர்ப்பமல்ல. தேசிய விவகாரத்தின் ஒரு அம்சமே.

(2) 1910 ல்; எந்த அரசியல் வாதியும் வருங்காலம் பற்றி தீர்க்கதரிசனம் சொல்லிவிட முடியாது.

❋ தலைமை பற்றி:

(1) 1916 ல்; உண்மையான மக்கள் தலைவன் ஒரு மேதை. அவன் பட்டங்களையும், சமூக அந்தஸ்தையும் தேடி அலைபவன் அல்ல. தாழ்மையான கூட்டுறவையும் உயர்ந்தவர்களின் பழக்கத்தையும் போல் அவன் கருதுவான்.

(2) 1913 ல்; மறுமுறையும் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்ற எந்தத் தலைவனும் மறுமுறை தேர்தலில் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியற்றவனாகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ சுதந்திரம் பற்றி!

(1) 1914 ல்; சுதந்திரம் என்பது மக்களின் உண்மைகளைப் பொதுப்படையாகப் பிரகடனப்படுத்திவிடுவதில் இல்லை. அவற்றை நடைமுறைக்கு கொண்டுவருவதே சரியான சுதந்திரம்.

(2) 1918 ல்; தன் தேசத்தின் சட்டதிட்டங்களை கௌரவிக்காத எந்த மனிதனும், தானே ஆதரவளித்து உருவாக்கிய ஒழுங்கு முறைகளை மதிக்காத எந்த மனிதனும் சுதந்திரத்தை அனுபவிக்கத் தகுதியற்றவன் என்றே நான் கருதுகிறேன்.

❀ கடமை பற்றி:

1889 ல்; சுதந்திரமாக வாழ்வது சுலபமல்ல. முயன்று பெற்ற சுதந்திரத்தை காப்பாற்றக் கடினமான கடமைகள் பல நிறைவேற்றப்பட வேண்டும்.

(2) 1910 ல்; நம்மை நாமே உணர்ந்து கொள்வதே நமது பிரதான கடமையாகும்.

❀ பொதுவானவை:

1908 ல்; முட்டாளை மட்டந்தட்ட ஒரே மார்க்கம், அவனை ஒரு மண்டபத்தைக் குத்தகைக்கமர்த்திப் பிரசங்கங்கள் நிகழ்த்தச் செய்வது தான். பொதுஜன பரிகசிப்பைப் போல முட்டாள் தனத்தை முறியடிக்க வேறு நல்ல மருந்து கிடையாது.

கோணல் பேர்வழிகளிற்குச் சரியான பாடம் கற்பிக்க வழி அவர்களை உயர்த்தி மக்கள் அவர்களை நன்கு பார்க்கச் செய்வது தான். அப்போது அவர்களின் கோணல் நிமிரும் அல்லது அவர்கள் தாமாகவே பதுங்கிக் கொள்வார்கள்.

நன்றி: டொரதி பொஸ்டிக்.

---

# சுவைத்துப் பார்ப்போம்

## பனம்பழத் தோசை

**தேவையான பொருட்கள்:** தும்பு நீக்கிய பனங்களி ஒரு சுண்டு. வசதி போலக் கைவசம் உள்ள மா ஒன்றரைச் சுண்டு.

(கோதுமை, அரிசி மா, குரக்கன் மா, தினை மா, சோழன் மா, மரவள்ளி மா எதுவாயினும் நல்லது.)

**செய்முறை:** பனங்களியைப் பிசைந்து சீலைத்துணியில் வடித்தெடுத்து எலுமிச்சம்பழப் புளிவிட்டுக் கொதிக்க வைக்கவும். இதனால் காறல் நீங்கிவிடும். கொதிக்க வைத்த களியை இறக்கி, ஆறவிட்டு ஏதாவது மாவைக் கொட்டிக் குழைத்துப் பிசைந்து புளிக்க வைக்கவும். மறுநாட் காலை அளவான உப்பிட்டு. நீர்விட்டுக் கரைக்கவும். மிளகு, சீரகம் பொடியாக்கிச் சேர்த்துக்கொண்டால் சுவை அதிகரிக்கும். நீங்கள் விரும்பியவண்ணம் தாளிதஞ்செய்து போடலாம். அல்லது வெண்காயம், மிளகாய் அரிந்து போடலாம். இங்ஙனம் தயாரித்த மாவைத் தோசைக்கல்லில் வார்த்துத் தோசைபோல எடுக்கலாம். இலுப்பெண்ணெய் உபயோகித்தால் நல்லது. பனம்பழத் தோசையில் மாப்பொருள், கொழுப்புப் பொருள், புரதப்பொருள், உயிர்ச்சத்து 'பி', கனிப்பொருள் முதலியன உண்டு.

- சு. பரநிருபசிங்கம் பி. எஸ்ஸி—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டே வருக!

உயர்வு தாழ்வென்ற பேதம்
ஒரு போழ்தும் கொண்டிடாது
அயராது நாட்டுக்காக
அரும்பணி யாற்றுகின்ற
செயல்மிகு வீரர்க்கெல்லாம்
சீரிய நெறியைக்காட்டி
தயை புரிந்திடவே வாராய்
தரணியில் புதிய ஆண்டே!

காட்டினைக் கழனியாக்கிக்
கனிதரும் சோலையாக்கி
நாட்டினிற் பஞ்சம் போக்கி
நல்லதோர் உலகை யாக்க
வாட்டமில்லா துழைக்கும்
வல்லபெருழவர்க் கெல்லாம்
காட்டிடப் புதியபாதை
கனிந்து நீ வருகை தாராய்.

அன்பினால் ஒன்றிணைந்து
அனைவரும் அனைத்தும் பெற்று
இன்பமாய் இங்கு வாழ
ஏற்ற நல் வழிகள் காட்டி
துன்பத்தை விரட்டி ஓட்டி
துணைநமக்காகி, இல்லம்
என்றுமே சிறக்க வைக்க
ஏற்றமாய் வருக வாழ்க!

வானமோ இனிது பெய்ய
வயல்நிலம் செழித்து ஓங்க
மானத்தைப் பெரிதாய் எண்ணும்
மங்கையர் மகிழ்வு பொங்க
தானமும், தவமும் ஓங்க
தன்னலம், பகைமை நீங்க
தாரணி களிக்க வாராய்
தகைமைகள் பலவும் தாராய்!

**இ. குலசேகரன்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அந்தநாள் ஞாபகம்

தற்போதைய யு. என். பி. அரசின் நிதியமைச்சர் திரு. றொனி டீ மெல்லிற்கும், அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து கட்சி மாறியதற்கும், 'கற்பகத்'திற்கும் தொடர்பு உண்டா?



றொனியுடன் அப்போதைய யாழ். திட்டமிடல் 'பிரதிப் பணிப்பாளர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன், அமரர் கலாநிதி கே. கைலாசபதி, முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி, முன்னாள் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், சமாசச் செயலாளரும் பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவருமான திரு. கே. நடராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என்பது 'கற்பக'வின் உறுதியான நம்பிக்கை. றொனி டீ மெல் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டதற்கும், ஆரம்பத்தில் தான் அங்கம் வகித்த ஸ்ரீ ல. சு. கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறிய வரலாற்றுக்கும் 'கற்பகத்'திற்கும் தொடர்புண்டு என்றால் நம்புவீர்களா?

1976ம் ஆண்டு யாழ். றிம்மர் மண்டபத்தில் கற்பகதருவாம் பனை வளத்தைப் பற்றிய மகாநாடொன்றைத் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் ஸ்தாபகரும், முக்கியஸ்தருமான தற்போதைய பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ஏற்பாடு செய்திருந்தார்.

இம் மகாநாட்டிற்குச் சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் அப்போது எம். பி. யாக இருந்த திரு. றொனி டீ மெல் அக்கட்சி சார்பில் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டார். அவருக்கு முன் பேசிய வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜச் செயலாளர் திரு. க. நடராசா அவரிடம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போது அப்போதைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தைக் கண்மண் தெரியாமல் தாக்கிப் பேசினார்.

மறுதினமே அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். அதனாலோ என்னவோ இன்று நிதியமைச்சராக நீண்டகாலம் பதவி வகிக்கும் பெருமையையும் பெற்றுவிட்டார். இச்சம்பவம் நிதியமைச்சர் றொனிக்கு "அந்தநாள் ஞாபகம்" நெஞ்சில் வந்து நிற்கும்.

## தென்னை நண்டு

பசுபிக் கடற்பகுதிகளில் தென்னை நண்டு என்று ஒருவகை இராட்சத நண்டுகள் இருக்கின்றன. இந்த நண்டுகள் மூன்று அடி நீளமும், ஆறு இறுத்தல் எடையும் உடையதாக இருக்கின்றன. இந்த நண்டு தென்னைமரத்தில் ஏறித் தேங்காய்களைப் பறித்துக் கீழே எறிகிறது. பின்னர் கீழே இறங்கிவந்து தனது பலம் பொருந்திய கால்களால் அவற்றை உடைத்துத் தின்கிறது. இந்நண்டு வகைகள் அந்தமான் தீவுகள் சிலவற்றிலும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# முதற் சம்பளம்

அந்தக் குடிசை என்று கூறுவதைக் காட்டிலும் 'கொட்டில்' என்று கூறுவது மிகவும் பொருந்தும். தென்னங் கிற்றால் வேயப்பட்ட கூரை. அது நெக்கி நவிர்ந்த நிலையில் இருந்தது. அந்தக் குடிசையின் அதிஷ்டகாலமோ என்னவோ நீண்ட பல நாட்களாக மழை பெய்யாமல் இருப்பது. பெருமழை பெய்திருந்தால் அந்தக் குடிசை இருந்த இடமே தெரியாமல் புல் முளைத்திருக்கும். அந்தக் கூரைக்குப் பொருத்தமாக தென்னோலையினால் இழைக்கப்பட்ட பன்னாங்குச் சுவர்கள் நாற்புறமும் 'அரணாக' அமைந்திருந்தன. அவை கூரை வேய்வதற்குப் பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டவை போலும்!

அம்மணமான தரை. குடிசையின் நடுப்பாகத்தில் இரண்டு மூங்கிற் தடிகள் நடப்பட்டு காங்கேசன் சீமேந்து அடைக்கப்பட்டு வரும் பையைப் பிரித்து, அந்தக் கடதாசியால் ஒரு அரைச் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. அது படுக்கை அறையும் சமையல் அறையும் வேறு வேறு என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

அந்தப் படுக்கையறையின் ஒரு மூலையில் ஒரு சிறிய மேசையில் 'டச்சுக்காலத்து' தையல் இயந்திரம் ஒன்று இருக்கிறது. இருந்து அதை இயக்குவதற்கு உதவியாக ஒரு நாற்காலியும் இருக்கிறது. 'கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு' என்பது போல் பெயரளவிற்கு அது நாற்காலி. ஆனால் அதற்கு மூன்று கால்கள் தான் நிரந்தரமானவை. அதில் அமர்ந்து அவள் தைக்கும்போது தான் நாலாவது கால் தற்காலிகமாக இடம்பெறும்.

வாழ்க்கையில் அவள் சந்திக்கும் நெருக்கடிகளைவிட இந்தச்

சுன்னாகம் வை. இராசதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய வீட்டினுல் உண்டாகும் இடநெருக்கடி அப்படி ஒன்றும் பெரிதாகப்படவில்லை அவளுக்கு!

மேசையில் இருக்கும் அந்த 'லொட லொடா' தையல் இயந்திரந்தான் அந்தக் குடிசையில் வாழும் இரண்டு ஜீவன்களினதும் பொருளாதாரப் போக்கிசம் – உழைப்புக்கருவி.

இராஜசேகர் எப்படி எப்படியோ வாழ்ந்தார். தன் ஒரே மகள் இராஜேஸ் இல்வாழ்வு

---

# விடிவுகாண வந்திடு!

வியர்வை சிந்தி அயர்வை வெறுத்து
விடிவு காண வந்திடு!
உயர்வை அடைய துயரைக் களையும்
உழைப்பு ஒன்றே தந்திடு!

மண்ணைத் திருத்தின் கண்ணைப் போன்ற
மணிகள் எங்கும் தோன்றுமே!
எண்ண மொன்றைத் திண்ண மாக
எடுத்துக் கொண்டால் நன்மையே!

எங்கள் நாட்டில் எங்கள் வாழ்வு
எதுவும் இன்றிப் போவதோ?
திங்கள் வானில் தங்கக் கதிர்கள்
தெறிப்ப தைப்போல் எழுந்திடு!

உழைப்ப வர்கள் தழைக்கு கின்ற
உண்மை தன்னைக் காணுவாய்!
திளைத்தி ருத்தல் பிழைத்தி டாதோ
திமிறி எழுந்து வந்திடு!

தனி உடமை இனி வளர்க்க
தண்டம் உண்டு முண்டுமே!
மனித வாழ்வு புனித மாகும்
மலரு கின்ற ஆண்டிலே!

"நவாலியூர்க் கவிராயர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்வதை இருந்து பார்க்க முடியாமல் இடையிலே போய்விட்டார். தாயும் கணவன் இறந்ததைத் தொடர்ந்து நோய் வாய்ப்பட்டுவிட்டாள்.

இன்று இராஜேஸ் – அதிகாலை சேவல் கூவுமுன் எழுந்து தையல் வேலை செய்யத் தொடங்குகின்ருள். கதிரவன் உச்சிக்கு வந்து ஓட்டைக் கூரையூடே ஒளிக்கிரணங்களைப் பரப்பும் பொழுது– தைத்துக் கொண்டே இருக்கின்ருள். அதே துவாரங்களால் விண்மீன்கள் பிரகாசிக்கும் பொழுதும் தைத்துக் கொண்டே இருக்கிருள்.

"ஓ....! விண்மீன்களே நீங்கள் ஏன் கண்களைச் சிமிட்டிக் கொண்டிருக்கின்றீர்கள்? பூமாதேவியின் மடியில் மானிடர் செய்யும் ஊழல்களைப் பார்த்து உங்கள் கண்கள் கூசுகின்றனவா?"

ஊர் உறங்கிவிட்டது. மயான அமைதி! அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு அந்த 'லொடலொட' தையல் இயந்திரத்தின் 'கட,கடா' சத்தமும், அவள் கால்கள் முன்னுக்கு போய் பின்னுக்கு வரும் பொழுது நாற்காலி எழுப்பும் 'கிரீச், கிரீச்' என்ற அழுகுரலும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

தலை கிறுகிறுக்கின்றது. கண்கள் பாரமேறி மங்கிவிட்டன. கை விரல்கள்சோர்வடைந்துவிட்டன. கால்கள் கருமமாற்ற முடியாது தவிக்கின்றன. இராஜேஸ் பெண்மையை மூடி மறைக்க முடியாத கந்தைத் துணியை உடையாகத் தரித்துக் கொண்டு தைத்துக் கொண்டே இருக்கிருள். இராப்பகலாக தைத்துத் தைத்துக் குவிக்கும் அவளுக்கு மானத்தைக் காக்க நல்ல உடை இல்லை.

விடுகட்டும் தொழிலாளி வீதியிலே தூங்குகிருன். ஆடை நெய்யும் நெசவாளி கந்தற்துணி கட்டுகிருன். பாடுபடும் பாட்டாளி பட்டினியால் வாடுகிருன். இவற்றிற்குக் காரணம் ஏற்றத் தாழ்வும் ஏமாற்றும் இருப்பது தானே! மற்றப்பெண்களைப்போல் இராஜேசும் ஒரு பெண்தானே! அவளுக்கென்ன அழகில்லையா? குணமில்லையா?

அவளுக்குக் காதலைப்பற்றிக் கற்பனை செய்து பார்க்கவும் நேரமில்லை. ஆனல் துயரப்படுவதற்கு நேரமுண்டு. அவள் கண்களில் கண்ணீர் பனிக்கின்றது.

"இராஜேஸ், பேப்பரிலை ஒரு விளம்பரத்தைப் பார்த்தன், உடனே உன்ர ஞாபகந்தான் வந்துது. அப்படியே பேப்பரையும் கொண்டு வந்திட்டன்" கூறிக்கொண்டே வந்தாள் அடுத்த வீட்டுச் சந்திரா.

பத்திரிகையை வாங்கிப் பிரித்தாள் இராஜேஸ். இரண்டாவது பக்கத்தில் மேல்மூலையில் 'தேவை' என்ற தலைப்பின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அனுபவமுள்ள தையற்காரர் ஆண் பெண் இருபாலாரும் உடனே தேவை. நேரில் வரவும்— தையல்நாயகி தையல் நிலையம், யாழ்ப்பாணம்" என்று சந்திரா குறிப்பிட்ட விளம்பரமிருந்தது.

"தமது ஸ்தாபனத்தை விளம்பரம் செய்வதற்காக தேவையான ஆட்களை எடுத்தபின்தான் விளம்ரம் செய்கிறார்கள். இந்தக் காலத்தில் பின் கதவால் நுழைபவர்களுக்குத்தான் இடமுண்டு. நாங்கள் இவற்றை நாடுவது கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல்தான்" என்றுதனது விரக்தியைக் கொட்டினாள் இராஜேஸ்.

"அப்படி எல்லாம் சொல்லாதை இராஜேஸ். அந்த ஸ்தாபனத்தின் முதலாளி என்ரை வீட்டுக்காரருக்குத் தெரிந்தவர். இவரோடை போனியெண்டால் கட்டாயம் உன்னை எடுப்பினை. நீ படித்திருக்கிறாய். இஞ்சை ராப்போலாய்க் கஷ்டப்பட்டு என்னத்தைக் கண்டாய்? அங்கை எட்டு மணித்தியால வேலை. நல்ல சம்பளம். இ -டமும் கன தூரத்தில இல்லை. நல்ல காரியத்துக்கு வெளிக்கிடேக்கை முன்னுக்கு மாட்டன் எண்ணாமை வெளிக்கிடு, இண்டைக்கு என்ரை வீட்டுக்காரருக்கும் லீவு. அவர் கூட்டிக் கொண்டு போவார் ..... அம்மாவைப்பற்றி யோசிக்காதை. நான் எல்லாம் அம்மாவுக்குச் சொல்றன்" என்றாள் சந்திரா.

சந்திராவின் கணவர் திருச்செல்வம் பட்டதாரி ஆசிரியர் மட்டுமல்ல பத்திரிகைத் தொழிலிலும் ஈடுபாடுள்ளவர். பத்திரிகைகளில் அவருக்குச் செல்வாக்கு இருப்பதுபோல் பல தொழில் ஸ்தாபனங்களிலும் கந்தோர்களிலும் 'செல்வாக்கு' இருப்பது ஒன்றும் அதிசயமல்ல.

இதையும் ஒரு முறை முயற்சித்துப் பார்ப்போம் என்ற எண்ணம் கருத்தரிக்க, அது செயலாகமாற, இராஜேஸ் தாயிடம் விடைபெற்று புறப்பட்டுச்சென்றாள்

முதலாளி பல கேள்விகளைக் கேட்டார். அவைக்கும் அவள் செய்யப்போகும் வேலைக்கும் எள்ளளவேனும் தொடர்பு இருக்கவில்லை. ஆனாலும் அவற்றிற்கு பக்குவமாய் பதிலளித்தாள்.

தன் கணவரின் சிபார்சினால்தான் இராஜேசுக்கு வேலைகிடைத்ததென்று சந்திராவும், தனது திறமையினாற்தான் தனக்கு வேலை கிடைத்ததென்று அவளும் நினைத்தனர். உண்மை எதுவாக இருந்தாலும் அவளுக்கு வேலை கிடைத்துவிட்டது.

தையல் இயந்திரத்தின் சக்கரங்களும் சுழன்றுகொண்டிருந்தன. நாட்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகியது. இன்று அவளுக்குச் சம்பள நாள்.

வேலை முடியுந்நேரம் ஒவ்வொருவராக முதலாளியின் அறைக்குச் சென்று தத்தம் ஊதியத்தைப் பெற்றுச் செல்கின்றனர். இராஜேசின் முறை வந்தது. அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய மஞ்சரி

## நீரிழிவு

நீரிழிவு நோய் உங்களை வாட்டும் போது மனம் தளராதீர்கள். இந்நோயை நிரந்தரமாகக் கட்டுப்படுத்த எமது வீடுகளிலேயே 'மருந்து' உண்டு. குரக்கன் உணவைத் தொடர்ந்து உணவாகப் பயன்படுத்துபவர்களை எப்பொழுதேனும் நீரிழிவு நோய் பீடிப்பதேயில்லை. பஞ்சந் தாங்கி எனப்படும் குரக்கன், எள், முருங்கை இலை போன்ற இயற்கை உணவுகளைத் தாராளமாக அன்றாட உணவுவகைகளில் சேர்த்துக் கொண்டால் நீரிழிவு நோயை நிரந்தரமாகக் கட்டுப்படுத்தி விடலாம்.

குரக்கன் உணவை வாழ்நாளில் தொடர்ந்து பயன்படுத்துவோரை எந்நிலையிலும் இந்த நோய் பற்றுவதேயில்லை.

எள்ளைச் சுத்தம் செய்து தோல் நீக்கி வறுத்துக் கொள்ளவும். பின் பனைவெல்லப்பாகு காய்ச்சி அஃதுடன் சேர்த்து எலுமிச்சம்பழ அளவு உருண்டைகளாகச் செய்து பத்திரப்படுத்தவும். தினமும் காலை ஒரு உருண்டை வீதம் சாப்பிடுங்கள்

இந்நோயாளிக்கு முருங்கையிலையும் சிறந்த உணவு. கொழுப்பில்லாத இறைச்சி, மீன், முட்டை, பருப்பு வகைகள், பயறு கீரை வகைகள் நன்கு சாப்பிடுங்கள். வெண்ணெய் எடுத்த மோர், தக்காளி, வெள்ளரிக்காய், எலுமிச்சம்பழ ஜூஸ் என்பனவும் நன்று.

அரிசி, கோதுமை, உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, வாழைப்பழம், பலாப்பழம்போன்ற உணவுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடவே கூடாது.

இந்நோயாளர்கள் தினசரி சிறிது உடற்பயிற்சி செய்தல் வேண்டும். சிறிது தூரம் வேகமாக நடத்தல், ஓடுதல், நீச்சலடித்தல் போன்றன போதுமான உடற்பயிற்சிகளாகும். சரியான மருத்துவத்தை மேற்கொண்டால், உணவுக்கட்டுப்பாட்டுடன் இருந்து விட்டால் இந் நோயை எளிதாக வென்றுவிடலாம் (மூலிகை)

---

அறைக்குள் செல்கின்றாள். அங்கே முதலாளி அரும்பு மீசையும் குறும்பு விழியும், பருத்த உடலுமாக அந்தச் சுழலும் நாற்காலியில் அமர்ந்து அரைவட்டத்திற்கு போவதும் வருவதுமாக இருக்கின்றார். அவர் முன் மேசையில் [illegible] கட்டாகவும் [illegible]ல்லைறகள் சில கோப்பைகளிலும் இருக்கின்றன. அவள் இவ்வளவு தொகை பணத்தை இதற்கு முன் கண்டதில்லை.

இராஜேஸ் அறைக்குள் வந்தது முதலாளி முகம் மலர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதட்டில் புன்சிரிப்பைத் தவழ விடுகின்றார். அந்தச் சிரிப்பிற் தான் எத்தனை அர்த்தங்கள் புதைந்து கிடக்கின்றன. 'இந்தப் பணத்தை வைத்து உலகையே விலைக்கு வாங்குவேன்' என்று அவர் கூறுவதுபோல் இருந்தது.

"இராஜேஸ்!... உனது குடும்ப நிலை எனக்கு நன்றாகத் தெரியும். இந்தச் சம்பளம் உனது தாயாருக்கு மருந்து வாங்கத்தான் போதும். உன்னைப்போல் கஷ்டப்பட்ட குடும்பத்தினர் பலர் இங்கு வேலை செய்கின்றனர். அவர்கள் வாழத் தெரிந்தவர்கள்... நீயோ உலகந் தெரியாதவளாக இருக்கின்றாய்!... லீவு நாட்களில் 'சும்மா' இப்படி வந்து போனால் உன் கவலைகள் கஷ்டங்கள் தீராதா? நீ மனது வைத்தால் உனது வாழ்க்கையையே மாற்றி அமைக்கலாம். பிறப்பின் பயன் சந்தோஷமாக – இன்பமாக வாழ்வது தானே! ...உனக்குப் பணம் தேவைப்படும் பொழுது கூச்சப்படாமல் கேட்டு வாங்கிக்கொள் ... நாளைக்குப் 'போயா' அல்லவா?... வாழ நினைத்தால் வாழலாம்" என்று கூறி அர்த்த புஷ்டியுடன் அவளை நோக்கினார்.

அவள் உடல் நடுங்கியது. தலை சுற்றியது. அவள் முதலாளியை ஏறெடுத்தும் பாராமல் – குனிந்த தலை நிமிராது தனது முதல்மாத சம்பளத்தை வாங்கிக்கொண்டு வாசலைத் தாண்டி நடந்து கொண்டிருந்தாள்.

'பணம் படைத்தவர்கள் செய்யும் அக்கிரமங்கள் மறைக்கப்படுகின்றன. ஏழைகளின் தவறுகள் பெரிதுபடுத்தப்படுகின்றன' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

வீடு அடைந்த இராஜேஸ் தாயிடம் தனது சம்பளப் பணத்தைக் கொடுத்தாள். மகளின் உழைப்பைக் கண்ட தாய் மகிழ்ச்சி அடைந்தாள். பூரிப்பில் அவளது நோய் அரைவாசி குறைந்துவிட்டது போல் ஒரு உணர்வு!

"பிள்ளை இது உன்ரை முதற் சம்பளம்..... நாளைக்கு துர்க்கை அம்மனுக்கு ஒரு பொங்கல் செய்வோம்...... எங்களுக்கு அவள் தான் துணை!" என்றாள் தாய்.

"ஆமாம் அம்மா! இது எனது முதற் சம்பளமும் கடைசிச் சம்பளமும். கண்டிப்பாக துர்க்கை அம்மனுக்குப் பூசை செய்யத் தான் வேண்டும்" என்றாள் இராஜேஸ். உறுதியாக, கண்களில் நம்பிக்கை ஒளி பிரகாசிக்க. நாளை விடிந்தால் புத்தாண்டு. அது அவளுக்கு மேலும் நம்பிக்கையூட்டியது.

(யாவும் கற்பனை)

---

## தூக்கம்

ஆண்களை விடப் பெண்களுக்கே அதிக நேரம் தூக்கம் தேவை. ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் உழைப்பும், களைப்பும் அதிகம். இது நோர்வே பல்கலைக்கழக மானிடவியல் துறையின் கண்டுபிடிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்! கண்ணீர்!!

வாலிபன் துக்கமின்றிக் கண்ணீர் சிந்துகிறுன். வயோதிபர் கண்ணீரின்றித் துக்கம் அனுபவிக்கிறுர். பழைய துக்கங்களை எல்லாம் நினைத்துப் புத்தம் புதிய கண்ணீர்த் துளிகளை வீணடிக்காதீர்கள். எதுவுமே கண்ணீரைப் போன்று வெகு சீக்கிரத்தில் உலர்ந்து போவதில்லை என்று அப்போலோனியஸ் என்ற மேதை கூறியுள்ளார்.

நாம் அழும்போது கண்ணீர் தாரை தாரையாக வடிகிறது என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனுல் எப்பொழுதுமே கண்களைக் கண்ணீர்த்துளிப் படலம் மூடியவண்ணம் இருக்கிறது என்பது நம்மில் அநேகருக்குத் தெரியாத ஒன்றுகும். எமது கண்களில் கண்ணீர் எப்பொழுதும் பரவியிருப்பதால் தான் கண்கள் சௌகரியத்தை அனுபவிக்கின்றன. நாமும் பார்வையைப் பெற்றுக்கொள்கின்றேம். நாம் சௌகரியமாகக் கண்களை உருட்டி மூடிக்க முடிகிறது. நன்ருகப் பார்க்கவும் முடிகிறது.

இக் கண்ணீர் தொற்றுக் கிருமிகளை எதிர்த்துச் செயல் புரியும் தன்மை உள்ளது என்று பென்சிலினைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் பிளமிங் உலகுக்கு அறிவித்தார்.

கண்ணீர் சாதாரண நீர் அல்ல. அதில் பல தாதுப்புக்களும், சிறிதளவு குளுக்கோசும் உள்ளன. இப்போது நாம் தினமும் அழுகின்றேம். பல வீடுகளில் மரணங்கள், இந்நிலை நீடிக்கும் வரை வெள்ளம்போன்று கண்ணீரை உகுக்கத்தான் போகிறேம். ஒரு நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்து ஆனந்தக்கண்ணீர் சிந்துவோம்.

ஏ. என். எஸ். திருச்செல்வம்

## நான் யார்?

சிவதனு

என்று உயிரினம் தோன்றியதோ
அன்று தோன்றியவள் நான்
இனநிற பேதம் எனக்கில்லை
இன்றுள்ள சாதி மதமும் எனக்கில்லை
சிறியவர் முதல் பெரியவர் வரை
சிறிது பெரிது பாராதவள் நான்
எல்லோரிடமும் சமமாக நானிருந்தும்
என்னைப் பாவித்துப் பயனடைபவர் பெண்கள்
வற்ருத ஊற்ருக இருப்பவள் நான்
நான்தான் கண்ணீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ அரியாலையூர் ராமண்ணு

# சாபம்

இலக்கியச் சுவை

அயோத்தி மன்னன் தசரதன் ஒரு நாள் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குப் போனான். நீண்ட நேரமாகக் காட்டிலே அலைந்து திரிந்து எந்த மிருகமும் அகப்படாத நிலையில் உடலும் உள்ளமும் சோர்ந்து ஒரு குளக் கரையிலே மரத்தருகே மறைந்து நின்றான்.

நீரருந்த பொய்கையை நோக்கி வருகின்ற மிருகங்களை வேட்டையாடும் நோக்கோடு நின்ற தசரதனுக்குப்பொய்கைநீர் சலசலக்கும் சத்தம் கேட்டது. வில்வித்தையிலே சிறந்த வீரன் தசரதன். சத்தம் வந்த திசையை நோக்கி அம்பை பாயவிட்டான். "அம்மா" என்ற அலறலுடன் ஒரு சிறுவன் குளத்து நீருள் வீழ்ந்தான். இதைச் சற்றேனும் எதிர்பாராத மன்னவன், ஆச்சரியம் மேலிட்டவனாய் அச்சிறுவனண்டை சென்று, தூக்கி, மடியில்இருத்தி அவன் வரலாறு யாதெனக் கேட்டான்.

இக்குளத்தில் இருந்து சில காத மைல் தூரத்தில், ஒரு மர நிழலிலே கண்களை இழந்த என் பெற்றோர் தவமியற்றிருக்கின்றனர். அவர்களுக்கு நான் ஒருவனே புத்திரன். அவர்கள் அருந்துவதற்கு நீரள்ள வந்த வேளையிலேயே எதிர்பாராத விதமாக உங்கள் அம்பு பட்டு நான் இக்கதியானேன். தாகத்தோடு இருக்கும் என் பெற்றோருக்குத் தண்ணீர் கொடுத்து, என் நிலையையும் கூறி விடுங்கள்',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

——என்று கூறிவிட்டு மன்னன் மடியிலேயே மரணமானான் அச் சிறுவன்.

என்றும் கலங்காத தசரதன் உள்ளம் அன்று கலங்கியது. நிலை தடுமாறியது. ஆராய்வின்மையை எண்ணி அவலப்பட்டது. 'அநியாயமாக ஒருகுழந்தையை கொன்று விட்டோமே; அவனின் கண் இழந்த பெற்றோரைத் தவிக்கச் செய்து விட்டோமே' என்றுஎண்ணியது. சில நாழி கழித்துச் சுய நினைவுக்கு மீண்டதசரதன் இறந்த சிறுவனின் கட்டளைப்படி, தாகத் தோடு இருக்கும் முனிவர்களுக்கு தண்ணீர் கொண்டு போனான். சிறுவன் சொன்ன இடத்திற்கு வந்த தசரதன் அங்குதவம்செய்து கொண்டிருந்த தபோதனர் களைக் கண்டான். பயமேவிட்டதால் அடிமேலடி வைத்து அவர்களின் அண்டையிலே வந்தான்.

தண்ணீர் அள்ளச் சென்ற சிறுவன் இதுவரை வராதது கண்டு அச்சமுற்றிருந்தவர்களுக்கு காலடியோசை கேட்டதும் தங்கள் மகன் வந்துவிட்டான் என்றெண்ணி "மகனே!...ஏது இவ்வளவுநேரம்?" என்று வினவினார்கள். அவர்களின் கேள்விக்கு எதுவித பதிலும் கூற முடியாத நிலையில், தானள்ளி வந்த நீரை அவர்களிடம் கையளித்தான் தசரதன்.

தாகத்தோடிருந்த முனிவர்கள் தண்ணீரை அருந்திவிட்டுத் தங்கள் மகனை நோக்கி "மகனே இவ்விடம் வா! ஒருமுறை உன்னை முத்தமிட வேண்டும்" என்று அழைத்தனர். மேலும் எதையும் மறைக்க விரும்பாத தசரதன் அவர்களருகே சென்று அவர்களை வணங்கி,

"முனிபுங்கவர்களே நான் உங்கள் மகனல்லன். கண்மூடித்தனமாக நான் செய்த காரியத்தால் கண்ணிழந்த நீங்கள் இப்போது கதியற்றவர்களாகிவிட்டீர்கள். உங்கள்மகன் குளத்திலே நீர் அள்ளும்போது ஏதோ மிருகம் என்று எண்ணி அம்பெய்து உங்கள் மகனைக் கொன்று விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். அநியாயமாகச் செய்த பழிக்காக காலமெல்லாம் உங்களுக்குக் கடமை செய்யக் காத்திருக்கிறேன்" என்றுகூறி அவர்கள் கால்களில் விழுந்து கதறி அழுது கண்ணீர் விட்டான்.

தசரதனின் கதறல் கேட்ட மாத்திரத்தே தங்கள் மகன் இறந்த செய்தி கேட்டு அழுது புலம்பிய முனிவர்கள் "கண்ணிழந்த எங்களுக்குக் கண்ணாயிருந்த மகனைக் கொன்ற நீ எங்களைப் போன்றே புத்திர சோகத்தால் இறக்கக் கடவாய்..." என்று சாபமிட்டுவிட்டு இரண்டு தபோதிகளும் நிலத்தில் வீழ்ந்து இறந்தனர். அவ்வாறே, தசரத மன்னனும் பின்னர் புத்திரசோகத்தால் இறந்தான்.

(அறிவொளிக்கலை)

---

வெங்காயத்தை உரிக்கத் தொடங்குமுன் அரை மணி நேரம் தண்ணீரில் ஊறப்போட்டு விட்டு உரியுங்கள். கண் எரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகமே சிறந்து வாழி!

கருநிறப் பனையென் றோதும்
  கற்பக தருவின் பயனைக்
கருதியே மக்கள் யாவும்
  பெற்றிடும் வகையில் இன்று
பெருமைசேர் பணிகள் செய்யும்
  'கற்பகம்' எங்கள் திருவே
சீர்பெற என்று மிங்கே
  சிறந்துநீ வாழி! வாழி!

மாரிநீர்க் குமிழி போலே
  மறைந்திடா தென்றும் வாழப்
பாரினில் திடசங் கற்பம்
  கொண்டுநீ மிளிர்தல் கண்டேன்
சீரிய உன்தன் தோற்றம்
  சிறந்துமே விளங்கக் கண்டேன்
கூரிய உன்தன் அறிவால்
  குவலயம் போற்ற வாழி!

காட்டினை வெட்டித் திருத்திக்
  களனிகள் ஆக்கி மண்ணில்
நாட்டிடும் செந்நெல் விளைந்து
  நமக்கெலாம் வாழ்வ ளிக்கப்
பாடுபட் டுழைக்கும் உழவன்
  செய்தநற் பயனைப் போற்றி
வீட்டினில் பொங்கல் செய்து
  மகிழ்ந்திடும் இந்த நாளில்

பனையினை நம்பி வாழும்
  பாமர மக்கள் யாவும்
மனையினில் சிறந்து வாழ
  மாசிலா ஐக்கி யத்தைத்
தினமுமே வளர்த்து மண்ணில்
  உயர்ந்திட வேண்டுமென்றே
எனதுளம் கனிந்த வாழ்த்தை
  உவந்துநான் அளிக்கின் றேனே.

க. பாலசுப்பிரமணியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இருந்து தமிழகம் வரை...

## -4-

கடந்த இதழில் தமிழகத்தில் நான் சந்தித்து உள்ளன்போடு உரையாடிய பெருமைக்குரிய ஒரு மனிதரைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? தமிழ்நாடு மாநில பனை வெல்ல மற்றும் தும்பு விற்பனைக்கூட்டுறவு இணையத்தின் பொறுப்பதிகாரியான திரு.முனுசாமியேஅவர். தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான கைத்தொழில் நிலையங்களுக்கும்,விசேடமாகப் பனைத் தொழில் நிலையங்களுக்குமான எனது விஜயம் வெற்றிகரமாக இடம் பெறுவதற்காக முன்னர் செய்யப்பட்ட ஏற்பாடுகளை அவர் மறுபரிசீலனை செய்தார்.

தமிழக அரசு நிர்வாக உத்தியோகத்தரான ஸ்ரீ என். கிருஷ்ண பாரதியை மீண்டும் அவர் தொடர்பு கொண்டு எனது உத்தியோகபூர்வ விஜயத்திற்கான ஒழுங்குகளைக் கவனித்தார்.

இலங்கையில் பனம் பொருள் அபிவிருத்திக்கென ஒரு சபை

---

க. நடராசா
தலைவர், பனை அபிவிருத்திச்சபை

---



கல்லக்காரம் விளைந்த பின் கழிவுப்பாணியை பனைவெல்லமாக பயன்படுத்தும் முறை- இந்திய தென்மாநிலத்தில் கவர்ச்சியான ஒரு சிறு கைத்தொழிலாகும்.

சாதாரண பாத்திரங்களைக் கொண்டு பனைவெல்லம் செய்யும் பாவையர் இருவரை கட்டுரையாளர் படம் பிடித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதையும் அதன் தலைவராக ஒரு தமிழர் இருப்பதையும் அறிந்து அவர் பூரிப்படைந்தவராகக் காணப்பட்டார். அடுத்த நாளே நான் மதுரைக்குச் செல்ல வேண்டுமென்று அவர் விரும்பினார். எமது பெருமதிப்பிற்குரிய கொமன்வெல்த் (பொதுநலவாய) பணிவள நிபுணரான திரு. கே. சம்பந்தம் அவர்களையும் என்னுடன் கூடவே அனுப்பி வைப்பதற்கும் அவர் முன்வந்தார்.

தமிழ் நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தின் சகல திட்டங்களையும், வேலைகளையும், செயற்பாடுகளையும் எனக்கு முழுமையாகத் தெரிவிப்பதிலும், எனது அபிப்பிராயங்களைக் கேட்டறிவதிலும் அவர் அக்கறை காட்டினார்.

இலங்கையில் சிறப்பாக வடமாகாணத்தில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கும், அவற்றின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மூலகாரணமாக நான் இருந்திருக்கிறேன் என்பதை அறிந்ததும் அவரது மகிழ்ச்சி இரட்டிப்பானது.

அன்று மாலையே நான் மதுரைக்குப் புறப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ரயிலில் முதலாம் வகுப்பில் பயணம் செய்வதற்கு எனக்கும் சம்பந்தம் அவர்களுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டது. அங்கே ரயில் வண்டியில் என்றால் என்ன, பஸ் வண்டியில் என்றால் என்ன, சன நெரிசல் அதிகமாயிருந்தும் கூடப் பிரயாணம் செய்வது மகிழ்ச்சிகரமானது, பாதுகாப்பானது.

சென்னையில் மாலை 5 மணிக்கு நாமிருவரும் புறப்பட்டோம். ரயிலில் எனக்கருகில் இருந்த பிரயாணிகளில் சிலர் நான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறேன் என்பதை அறிந்ததும் உணர்ச்சிவசப்பட்டவர்களாக அக்கறையுடனும் ஆர்வத்துடனும் என்னோடு உரையாட முயன்றனர். சிலர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாத நிலை. தற்போது யாழ் - கொழும்பு ரயிலில் பயணம் செய்வதிலுள்ள "அனுபவம்" அனைவருக்கும் தெரிந்ததே.

நாம் கொழும்பிற்குப் பயணம் செய்யும் போது தூங்கி வழிந்து அநுராதபுரம் வந்ததும் தாமாகவே விழித்து எழுந்து விடுவோம். அந்தத் திகில் அனுபவம் அங்கு செய்த பயணத்தில் எனக்கு ஏற்படவில்லை. சுதந்திரமான ஒரு பயணத்தை மேற்கொள்ளுவதாக உணர்ந்தேன். ரயில் பயணத்தில் அங்கே குறிப்பிடக்கூடிய அம்சம் என்னவென்றால் குறிப்பிட்ட நேரத்தில் ரயில் புகையிரத நிலையத்தை வந்து சேர்ந்து விடுவது தான். அத்தோடு பயணிகள் எவரும் தமது விருப்பத்திற்கேற்ற உணவு வகைகளை ரயில் நிலையங்களில் பெற்றுச் சுவைத்து உண்ணக் கூடியதாக இருப்பதும் சிறந்த அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை கொல்வோம்!

நல்லதை நினைக்கச் செய்வோம்
நாட்டினில் நீதி காப்போம்
தொல்லைகள் துயரம் எம்மைத்
தொட்டிடா விழிப்புக் கொள்வோம்
இல்லை என்கின்ற சொல்லை
இல்லையென் றுக்கி வைப்போம்
வல்லமை கூட்டி நாட்டின்
வளங்களைத் தேக்கி வெல்வோம்.

கல்வியில் சிறந்து காண்போம்
கலை கலாச்சாரம் காப்போம்
இல்லை எம்மிடையே பேதம்
இங்கு நாம் ஒன்று என்போம்
நல்லுற வொன்றே எங்கள்
நாட்டமாம் என்றே கொள்வோம்
புல்லர்கள் நட்பு என்றும்
புகுந்திடா நெஞ்சு காப்போம்.

ஏழைகள் செல்வர் என்ற
ஏற்றத் தாழ்வில்லை மண்ணில்
கோழையாய் வாழ்த லின்றிக்
கொள்கைக்கு உயிரை ஈய்வோம்
ஜாதிகள் கொடுமை சொல்லும்
சாக்கடை நீதி வெல்வோம்
நாளெல்லாம் கண்ணீர் சிந்தி
நலிந்திடும் வறுமை கொல்வோம்.

**நெடுந்தீவு லக்ஸ்மன்**

---

ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போது பல அழகிய நகரங்கள், கிராமங்கள் எம் கண்களில் எதிர்ப் படும் போது எல்லாம் திரு. சம் பந்தம் அவர்கள் நாம் சந்திக்க நேர்ந்த இடங்களின் பூர்வீக வரலாறு, சரித்திரபூர்வமான நிகழ்ச் சிகள், அக்கிராமங்களின் விசேட தன்மைகள் பற்றிச் சுவைபடக் கூறிக்கொண்டே இருந்தார்.

ஒவ்வொரு ரயில் நிலையத்தை யும் நாம் கடக்கும் போது சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராட்சதப் பறவை

தெற்கு பசுபிக் கடல் பகுதிகளில் அல்பட்ராஸ் என்ற கடல் பறவை இருக்கிறது. கடல் பறவைகளிலேயே மிகப்பெரிய பறவை இதுதான். இதன் இறக்கைகள் 11 அடி நீளத்திற்கும் அதிகமானவை. எதுவிதப் பயங்கரப் புயல் காற்றையும் எதிர்த்துப் பறக்கக் கூடியது இந்தப் பறவை. அது மட்டுமல்ல. இறக்கைகளைச் சிறிதும் அசைக்காமல் பல மைல்கள் வானில் மிதந்து பறக்கக்கூடியதும் இப்பறவையே.

ரயில் நிலையங்களை எங்கோ பார்த்த ஞாபகம் இருந்தது. அடிக்கடி சினிமா பார்க்கும் பழக்கம் இருந்தமையினால் இந்த ரயில் நிலையங்களை ஏதாவது சினிமாப் படம் ஒன்றில் பார்த்திருப்போம்.

அதிகாலை 5. 30 மணிக்கு நாம் மதுரை நகரைச் சென்றடைந்தோம். அங்கே எனக்கு அபூர்வமான வரவேற்பு காத்திருந்தது. கழுத்தில் துண்டு போட்ட பலர் என்னை வரவேற்கக் காத்து நின்றார்கள். ரயிலிலிருந்து இறங்கியதுதான் தாமதம் எனது கழுத்தில் மாறிமாறித் "துண்டு" கள் விழத்தொடங்கின.

பயந்து போய்விடாதீர்கள்! அங்கே எமது கழுத்தை வெட்ட எவரும் இருக்கவில்லை. துண்டுகள் என்று நான் குறிப்பிட்டது கைத்தறியினால் செய்யப்பட்ட சால்வைகளைத்தான் மாலைகாயப் பாவித்து கழுத்தில் போட்டு வரவேற்பது சம்பிரதாயம் என்று அறிந்து கொண்டேன். இப்படிப் போடப்பட்ட துண்டுகளால் எனக்கும் குறைந்தது 15 சால்வைகள் கிடைத்தன.

அங்கு நின்ற அனைவரிலும் என்னைக் கவர்ந்தவர்கள் சிலர். என் கருத்தில், என் கண்ணில் முக்கியமாகக் காணப்பட்டவர் ஒருவரே. அவர் யார் என்பதை அடுத்த இதழில் கூறுகின்றேன்.

(தொடரும்)

## கற்பகத்தின் விலை!

கற்பகம் சஞ்சிகையின் விலை ஐம்பது சதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளதை எமது அன்பார்ந்த அங்கத்தவர்களும், வாசகர்களும் அவ்வளவு பெரிதுபடுத்த மாட்டார்களென்பது எமது நம்பிக்கை. இந்த சிறிய விலை உயர்வு வெறும் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. காகிதவிலை ஏற்றம், அச்சுக்கூலி. இன்று பலரும் பாராட்டும் வண்ணம் வெளிவந்து கொண்டிருப்பதற்கான புளக் செலவுகள் போன்ற இன்னோரன்ன தவிர்க்கமுடியாத காரணத்தினால் இந்த ஐம்பதுசதவிலை கூட்டப்பட்டுள்ளதென்பதை எமது அங்கத்தவர்களுக்கும் வாசகர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

— ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❀ கு. வடிவேலு, மாதகல்
கே: கற்பகனரே இரவில் நீங்கள் படுக்கப் போகும் போது......?
ப: விடியும் மறுநாள் நல்ல படியாக இருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்வேன்.

❀ ❀ ❀

❀ பி. எஸ். குணளன், யாழ்ப்பாணம்
கே: கேள்வி கேட்பது பெரிய காரியமோ?
ப: உண்மை. கேட்க முடியாத இடத்தில்!

❀ ❀ ❀

❀ கே. சுபாஷினி, திருநெல்வேலி
கே: அடுத்த பிறப்பில் அரசியல் வாதிகள் எப்படிப் பிறப்பார்கள்?
ப: தங்கச்சி சொல்லவேமாட்டேன்: ஏனென்ருல் அடுத்த ஜென்மத்தில் எடுக்கவேண்டிய பிறவியை இப்போதே எடுத்து விடுவார்களே.

❀ ❀ ❀

❀ கே: கணேசமூர்த்தி, உசன்
கே: 'சாகாவரம், என்ருல் என்ன?
ப: முற்காலத்தில் அரசர்களும், முனிவர்களும் கடுந்தவம் செய்து உலக பரியந்தம் வாழ்வதற்கு இவ்வரத்தை இறைவனிடம் பெற்றுக் கொண்டதாக புராணங்கள் கூறுகின்றன. ஆனல் இப்போது...!

❀ ❀ ❀

❀ கி. கிருஷ்ணனந்தன், புலோலி
கே: உலக அழிவுக்குக் 'கலிகாலம்' தான் காரணம் என்கிருர்களே?
ப: எங்கே ஐயா கலிகாலம்? இப்போ நடக்கிறது 'ஷெல்' யுகம். முன்பு இயமனின் 'பாசக் கயிறை' நினைத்துக் கலங்கிய நாம், தற்போது 'ஷெல்'லைக் கண்டு தானே அஞ்சிக் கலங்கி ஓடுகின்ருேம்.

❀ ❀ ❀

❀ எஸ். சிவகுரு, திக்கம்.
கே: விண்வெளிக்கு மூன்று தடவைகள் போய்வந்த 'சலஞ்சர்' வெடித்துச் சிதறிய காரணம் விஞ்ஞானிகளுக்குத் தெரியவில்லை. உமக்குத் தெரியுமா?
ப: உஷ்...! நல்ல ஆளய்யா நீர்! அமெரிக்கஞேடு என்னைச் சிண்டு முடிந்துவிடப் பார்க்கிறீரே!

❀ ❀ ❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுவோம்...
உழைப்போம்...
உயர்வோம்...



மில்க்வைற் தயாரிப்புகளுக்கு வழங்கும் ஆதரவு நாட்டின் நற்பணிக்கே!

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அழகிய பாரதியார் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.





### பதநீர்

புத்தம் புதிய பதநீர் போதை தரக்கூடியதல்ல. இந்துஸ்தானில் இது 'நீரா' எனப்படும். பதநீர் பருகியதால் ஏராளமானோர் மலச்சிக்கலிலிருந்து குணமடைந்திருக்கின்றனர். தினந்தோறும் காலையில் தேனீர் பருகுவதற்குப் பதிலாக ஒரு குவளைப் பதநீர் அருந்தினால் காலை உணவாக வேறெதுவும் தேவைப்படாது.

\- மகாத்மா காந்தி

மில்க்வைற் தொழிலகம்
த. பெ. இல. 77, 525/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

❋ எஸ். கணேசமூர்த்தி, நீர்வேலி

கே: இலங்கையிலிருக்கும் தமிழர்களுக்கும், இலங்கையை விட்டு வெளிநாடு சென்ற தமிழருக்கும் நீங்கள் சொல்லக்கூடியது......?

ப: நான் சொல்லக்கூடியது இதுதான். அந்நிய மண்ணில் அகதியாக நடிப்பதைவிடப் பிறந்த மண்ணில் அகதியாக இருப்பதே மேலானது.

## சர்ப்பகந்தி

பாம்பு கீரியைக் கடித்துவிட்டால் கீரி ஒரு மருந்துச்செடியைத் தேடிக் கண்டு பிடித்து உண்கிறது. இந்த மருந்துச்செடிக்குப் பெயர் சர்ப்பகந்தி. இப்பச்சிலை உலகெங்கும் இன்று புகழ் பெற்றிருக்கிறது. 'ரவ்வோல்பியா செர்ப்பெண்டினு' என்று ஆங்கிலத்தில் இதனைச் சொல்வர். இதன் வேர் இரத்தஅழுத்தத்தைக் குறைக்கப் பயன்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் சுடும்

-4-

ரீச்சரின் மாஸ்ரர்.

மாணவர்கள் எல்லோரும் மிஸ்ற்றர் முருகேசுவை அப்படித் தான் குறிப்பிடுவது வழக்கம். டீலர் அவரை நேரடியாகவே கூட அப்படி அழைப்பதும் உண்டு.

மிஸ்ற்றர் முருகேசு வீவில் வந்திருக்கும் வேளைகளில் இடைக் கிடை எங்களுக்குப் படிப்பித்தும் கொள்வார். அதனால் அவரை முருகேசு வாத்தியார் என்று கூடச் சிலர் குறிப்பிடுவதுண்டு. செல்லத்துரை போன்ற குறும் பர்கள் "அரைவாத்தி" என்றும் அவர் பின்னால் சொல்லுவார் கள்.

ரீச்சர் எங்காவது போய்விட் டால், அல்லது "மூன்றுநாள்" அவள் ஓய்வெடுத்துக் கொள்ளும் வேளைகளிலும், ஹெட்மாஸ்ற்றர் யோகநாதன் அஸோசியேசன் மீற்றிங் அந்த மீற்றிங் இந்த மீற்றிங் மனேஜரைகாணவென்று வெளியே போய்விடும் நாட்களில்

சில வேளைகளில் கூட அவர் பொறுப்பிற்காகவும் மிஸ்ற்றர் முருகேசுதான் ஐக் பண்ணுவார். இதனால் பொக்கர் கணபதிப் பிள்ளை வாத்தியாருக்கு திடீ ரென்று பொல்லாத கோபம் எழுந்து விடும். முறைக்கு பொக் கர்தான் ஹெட்மாஸ்ற்றர் யோகநாதனுக்காக ஐக் பண்ண வேண்டியமுறையாதலால் அவர் கோபமும் ஞாயமானதுதான். ஆனாலும் பொக்கரின் கோபம் அங்குள்ள வாத்திமாரின் ஒரு மயிரைத்தானும் அசைக்க முடி யாத புசுபுசுத்த கோபமேதான். அதனால் அவலை நினைத்து வெறும் உரலை இடிக்கும் கதையின் போக் கில் பொக்கர் மாணவர்களுடன் உறுமித் தீர்ப்பார். புலியின் உறு மலாக வெளிப்படும் பொக்கரின் கோபத்தனுவால் முன்வாய்ப் பற் களில்லாத வாயினின்றும் வெற்

தொடர்கதை ❀ கே. வீ. என்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிலேக் கக்கலேதான் கொட்டுப் பட்டுச்சிதறிப்பறக்கும்.

என்ன இருந்தாலும் எங்கள் ரீச்சர் ஒரு குளிர் நிலவுதான். என்ன அகோரக் கோபக்காரனுக பொக்கர் மாறியிருந்தாலும் ரீச்சரின் வரவும், செய்கைகளும் அவர் தலையில் ஐஸ்கட்டி வைத்து அகோரத்தைத் தணிப்பதைப் போன்று அவர் கோபம் ஆறி விடும். தண்ணொளி பிரகாசிக்க அவள் தன் கொவ்வை இதழ்களைத் திறந்து பற்களைக் காட்டி அவர் எதிரே வந்து நின்று சிரித்து பொக்கரின் வெற்றிலைச்சரையை உரிமையுடன் பறித்து வைத்துக் கொண்டு போட ஆரம்பிப்பாள். பொக்கரின் கோபமெல்லாம் நரசிங்க அவதாரத்தின் அகோரத்தைத் தணிக்க வந்த லெட்சுமி தேவியின் குளிர் பிம்பத்தில் நனைந்து தணிந்து விடுவது போன்று ஆகிவிடும்.

ஹெட்மாஸ்ற்றர் யோகநாதனின் வகுப்பிற்கு நேர் எதிர்த்த வகுப்புத்தான் ரீச்சருடைய கீழ்ப் பிரிவு வகுப்பு இருந்தது. ரீச்சர் எழுந்து நின்று கொண்டு தன் பெயரில் வரும் "பருத்துறை ஊராம் பவளக்கொடி பேராம் பாவைதன்னை ஒப்பாள் பாலெடுத்து விற்பாள். பாற்குடமும் சுமந்து பையப் பைய நடந்து... என்ற இந்தப் பாடலை மிக அழுத்தம் திருத்தமாக அங்கஅசைவுகளுடன் வெகுநேர்த்தியாகப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும்போது "பால்குடம் சுமந்து" என்ற அடியை ஐந்தாறு தரம் பிழைதிருத்தம் என்ற போர்வையில் திரும்பத் திரும்பச் சொல்லி தன் பாற்குடமார்பகங்களை மறைத்திருக்கும் தாவணி சறுகிவிழும்படியாக 'பையப்பைய நடந்து' என்ற அடுத்தடிக்கொப்ப நடைபயின்று காட்டி தாவணி சறுகி விழவேண்டுமென்பதற்காகவே அப்படி நடப்பாளாம்- என்று செல்லத்துரையும் ஆறுமுகமும் இளித்து இளித்துச் சொல்லும்போது எனக்கு எரிச்சலேதான் மூழும். அவளின் அந்த அபிநயத்தையும், பாட்டையும் ஹெட்மாஸ்ற்றர் யோகநாதன்- வெகுவாக ரசித்துக் கொண்டிருப்பாராம். ஹெட்மாஸ்ற்றர் யோகநாதன் புன்னகை பூப்பதுவும், மலர்ச்சியுடன் இருப்பதும் இந்த ஒரு வேளையில் மட்டும்தான் என்றும் செல்லத்துரையும் ஆறுமுகமும் அடித்துச் சொல்லுவார்கள். வேறென்னென்னவோ கதைகளைக் கூட ஹெட்மாஸ்ற்றரையும், ரீச்சரையும் இணைத்துப் பிணைத்துக் கதைப்பதில் வாய் இவர்களுக்கு கூசுவதே இல்லை.

செல்லத்துரையினதும், ஆறுமுகத்தினதும் அருவருப்பான பாஷைகளைக் கேட்கும் எனக்கு ஆத்திரமும் எரிச்சலுமேதான் பற்றிக்கொண்டுவரும்.

"சீ, வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருங்கோடா. எழுத்தறிவித்தவனைப் பற்றி இப்படியெல்லாம் பேசப்படாதடா" என்பேன்.

"பனையர், பங்கைபார் பனையற்ற பகிடியை... பனைமாதிரி வளர்ந்ததே தவிர பண்டிக்கு வேறை ஏதாவது நன்மை நரகம் தெரியுதோ என்டுபார்" என்பான் செல்லத்துரை என்னைப் பார்த்து பகிடியாக.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களும் மரங்களும்

வைத்தியமணி பே. பிலிப்ஸ்



ஒருவன் என்று ஆண்மையில் ஆரம்பிப்போம். ஒருத்தியென்று பெண்மையையும் உள்ளடக்கி ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வோம். குழந்தை வளர்ந்து படித்து, தொழில் புரிந்து, உழைத்து தனது குடும்பத்தைப் பாதுகாத்து வர்க்க விருத்தி செய்து ஊருக்கும் உலகுக்கும் பயன் தந்து பராயமடைந்து, பலவீனமடைந்து, பழுத்து, நோய்வாய்ப்பட்டு இறந்து, எரிந்து சாம்பலாகிறான்.

இதேபோன்றுதான் மரமும் சிறிதாக முளைத்து வளர்ந்து ஒரு விருட்சமாகி ஊருக்கு ஒரு நல்ல நிழலாகி உயிருள்ள பல பறவைகளுக்கு உணவாகப் பழங்களைக் கொடுத்து ஈற்றில் பலவீனமடைந்து பழுத்து பட்டு காய்ந்து அல்லது உயிருடன் அரியப்பட்டு பலகையாகிப் பயன் தந்து ஈற்றில் எரிந்து சாம்பலாகிறது.

மனிதனும் எரிந்து சாம்பலாகிறான். மரங்களும் சாம்பராகின்றன. எனினும் மனித வாழ்வுக்கு மரங்கள் இன்றியமையாதனவாக விருக்கின்றன.

ஆண்டவனால் படைக்கப்பட்ட இப்பூவுலகில் மண்ணில் முளைப்பவையெல்லாம் மரங்களே. மனிதன் கண்ணில் பட்டவையெல்லாம் மரங்களும் மூலிகைகளுமே. இம் மூலிகைகள் எல்லாம் மனிதனுக்கும் மனித வாழ்வுக்கும் மிகமிக அத்தியாவசியமானவை. மரங்களும் மூலிகைகளும்

(அ) மனிதன் உயிர் வாழ்வதற்கும்

(ஆ) மனிதன் உடல் வளர்ச்சிக்கும்

(இ) மனிதனின் திடவாழ்வுக்கும்

(ஈ) மனிதனின் பிணி அகற்றலுக்கும்

மிக மிக முக்கியமானவையாகும்.

(அ) மனிதன் உயிர் வாழ்வதற்கு தூயகாற்று அவசியம். மரங்கள் கரியமில வாயுவை உட்கொண்டு பிராணவாயுவை மனிதனுக்கு அளிக்கின்றன. இதன் மூலம் மனித உயிர் வாழ்விற்கு மரங்கள் உதவுகின்றன.

(ஆ) மனித உடல் வளர்ச்சிக்கு தானிய வகைகளாக கிழங்கு

(30 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிய சீடன்

**மடையன்:** பொல்லாத நதியல்லோ நித்திரை கொள்ளுது
நல்ல சமயமே நாங்களோ போகலாம்.
சத்தங்கள் செய்யாதீர், வாயைத் திறக்காதீர்
பத்திரமாய் நாங்கள் ஆற்றைக்கடக் கலாம்.
நல்ல தருணம் நாம் மடத்துக்கு ஏகலாம்
எல்லோரும் எழுந்து விரைந்தோடி வாருங்கள்.

[அறுவரும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவியபடி சப்தமில்லாமல் ஆற்றில் இறங்கி அலைகள் ஓசைப்படாமல் மெதுமெதுவாய்க் காலைத் தூக்கி வைத்துக்கொண்டு இலகுவாக நதியைத்தாண்டிக் கரையேறினார்கள். கரையேறியவர்கள் தலைகால் தெரியாத மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தனர். அப்பொழுது ஞானம் பெற்றவன் போல மூடன்]

**மூடன்:** எல்லோரும் வந்துதான் சேர்ந்தோமோ
பொல்லாத ஆறெம்மைக் காணலையா
அபாயமே இல்லாமல் வந்தோமா– நாம்
ஆறுபேரும் ஒன்று சேர்ந்தோமா
எண்ணித்தாம் பார்ப்போமே எத்தனை பேரென்று
எங்களில் ஆறுபேர் நிற்கவேணும்.

[மூடன் தன்னை விட்டுவிட்டு எண்ணுகிறான். ஐவரே நிற்கக் காணுகிறான்.]

**மூடன்:** எங்களில் ஒருவனைக் காணவில்லை.
ஏதுசெய்வோம் நாங்கள் ஐந்து பேரும்.

**குரு:** என்ன?

**மூடன்:** ஆறுதான் ஒருவனைத் தின்றுபோட்டுது
ஆறுபேர் எங்களில் ஐவரே நிற்கிறோம்

**சீடர் ஐவரும்:** ஐயையோ இதுவென்ன பேரிழவு
அப்பப்பா நாங்களோ ஏது செய்வோம்

**குரு:** நானே எண்ணுகிறேன் அழாதீர்கள் சீடரே
நன்றாகக் கவனித்து எண்ணுகிறேன்
ஐந்துபேர் நிற்பது உண்மைதான் சீடனே
ஐயையோ ஒருவனோ ஆற்றோடு போய்விட்டான்

**ஆறுபேரும்:** பாவி ஆறு நீ துரோகி ஆறுநீ
தாவி ஒருவனைப் பறித்தே தின்றிட்டாய்
எங்களிலொருவனைக் கொன்றதினாலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையே உனக்கென்ன ஆபத்தான் வந்திடும்
கொடும்புலி போலக் கொலைமனம் உன்மனம்
கடுங்கொலை யாறே நடுங்குதே நினைக்கையில்
கிழங்கு போல விழுங்கி விட்டாயே
இரும்பு போலக் கடினமோ உன்மனம்
பெண்களுடனே நீ பிறக்கவே இல்லையா?
ஆண்களுடனேயும் பிறக்கவே இல்லையா?
உடன் பிறப்புக்கள் உந்தனுக்கில்லையா?
கடக்கவே போகிறாய் காரணம் என்ன சொல்?
நன்றி கெட்ட நாசகாலனே
நின்று இவ்வுலகில் நிலைத்திருப்பாயா?
அண்டத் தளவும் அலையெறிவாயா?
மண்ணில் முட்டி மகிழ்ந்திருப்பாயா?
கடல்போல் முழங்கிக் கரைபுரள்வாயா?
குளிர்வெண் முத்தம் கொழித்திடுவாயா?
உண்ணீர் வற்றும் உன்னூற்றுக் கண்ணடைக்கும்
பள்ளம் தூரும் உன் வெள்ளமோ ஆறும்
உள்ளம் வெதும்பும் உன்உருத் தோன்றுது
கள்ள ஆறே எம்மைக் கலங்கவைத்தாயே.

[ இப்படி ஆற்றைத் திட்டுகிறார்களே ஒழிய தங்களில் யாரை ஆறு கொண்டு போனதென்று தங்கள் மூளையைப் பாவித்து அறிய நினைக்கவில்லை. யாரென்று விசாரிக்கவும் இல்லை. புத்திமானான வழிப்போக்கன் ஒருவன் அந்த நேரத்தில் அங்கே வந்து அவர்கள் துக்கப்படுவதற்கான காரணத்தைக் கேட்கிறான் ]

**வழிப்போக்கன்:** என்ன நடந்தது உங்கள் எல்லோருக்கும்
என்றால் ஆன உதவிகள் செய்கிறேன்

**அறுவரும்:** ஆறுதான் நித்திரை செய்கையிலே
ஆறுபேர் நாங்களும் வந்தோமையா
ஆற்றைக் கடந்த பின் பார்க்கையிலே
ஆறுபேரில் ஒருவர் குறையுதையா
பொல்லாத ஆறு இன்றுதான் போட்டுது
எல்லோரும் அழுகிறோம் நம்பனே இத்தால்

**வழிப்போக்கன்:** மந்திரவித்தையில் கெட்டிக்காரன் நானும்
தந்திரமாய் அவனைப் பெற்றுத்தருகிறேன்
என் வசம் உள்ளன பேய் பிசாசுகள் —அவனை
உம் வசம் தருகிறேன் ஒரு கணத்திலே
வெகுமதி என்ன தருவீர்கள் சொல்லுங்கள்
வெற்றி உம் பக்கம் என்னையே நம்புங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறுவரும்:** திக்குத் திசைமாறி அலைகின்ற வேளையில்
பக்கபலமாக உதவிட வந்தாயே.

குரு: எம்மிடம் இருப்பதே நாற்பத்தைந்து காசு
உம்மிடம் அதைத்தரச் சம்மதித்திடுகிறோம்
காணுமல் போனவன் ஓடியே வந்திட்டால்
வாணுளில் உமக்கு நாம் நன்றியாய் வாழ்வோமே

[வழிப்போக்கன் இவர்களின் மூடப்புத்தியை நன்முக அறிந்து கொண்டு கையில் வைத்திருக்கும் வச்சிர உலக்கை போன்ற பூண் போட்ட தடியை எடுத்து வந்து காட்டி]

**வழிப்போக்கன்:** மந்திர வித்தையும் இதிலேதானிருக்குது
தந்திரவித்தையும் இதிலேதானிருக்குது
வரிசையாய் எல்லோரும் நின்று கொள்ளுங்கள்
வகைக்கொரு அடியும் வாங்கிக்கொள்ளுங்கள்
முதுகில் அடியொன்று பட்டதும் முன்வந்து
இதுதான் என்பெயர் என்று சொல்லுங்கள்

[மந்திரவித்தைக்காரனுக நிற்கும் வழிப்போக்கன் முதலில் குருவுக்கு முதுகிலே பிரம்பாலடிக்கிறுன். ஒவ்வொருவரும் தங்கள் பெயரையுஞ் சொல்லி அடியையும் வாங்குகிறுர்கள்.]

**வழிப்போக்கன்:** ஆறுபேர் நிற்பதை அறிந்து கொள்ளுங்கள்
ஆறுதின்றவன் வந்துமே சேர்ந்திட்டான்

**ஆறுபேரும்:** ஐயா உங்கள் மந்திர வித்தைக்கு
மெய்யாய் நன்றி மறந்திடவே மாட்டோம்.

[வழிப்போக்கனை மெச்சி நாற்பத்தைந்து காசுகளையும் அவனுக்குக் கொடுத்து விட்டுப் போகின்றுர்கள்]

(தொடரும்)

---

(29 ம் பக்கத் தொடர்ச்சி)

வகைகளாக, பூவகைகளாக பழவகைகளாக, மாப் பொருட்களாக, பதநீர், கருப்பஞ்சாறு போன்ற நீர் வகைகளாக மரங்களும் மூலிகைகளும் மனிதனுக்கு உதவுகின்றன.

(இ) மனிதன் திடமாக வாழ் வதற்கு வேண்டிய உலோ கச் சத்துக்களையும், சீவசத் துக்களையும் மரங்களும் மூலி கைகளும் வழங்குகின்றன.

(ச) இஞ்சி, உள்ளி, சாறணை, துளசி சித்தரத்தை ஏலம், கடுக்காய், நெல்லி போன்ற மூலிகை வகைகளாக பிணி அகற்று வதற்கு மரங்கள் மனித னுக்கு உதவுகின்றன.

ஆகவே மனித வாழ்வில் மிக மிக முக்கியமானது மரங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை செய்த மனிதர்

## எம். எஸ். சினித்தம்பி



திரு. எம். எஸ். சினித்தம்பி அவர்கள் கல்விக்கும் சமூகத்திற்கும் செய்த அளப்பரிய தொண்டு காரணமாகச் 'சாதனை செய்த மனிதர்' என்ற வரிசையில் சர்வதேசப் புகழ் பெற்றுள்ளார். இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் சர்வதேச வாழ்க்கைச் சரித்திர வெளியீட்டுக் கழகத்தினர் விரைவில் வெளியிட இருக்கும் "சாதனை செய்த மனிதர்கள்" என்ற நூலில் அவரது வாழ்க்கை வரலாறும் சாதனைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஜூலைமாதம் 13 ம் திகதி தொடக்கம் 31ம்திகதி வரை அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் நகரில் நடைபெறும் சாதனையாளர் காங்கிரசுக்கு வருமாறு இவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதிபர் சேவையிலிருந்து 1980ல் ஓய்வு பெற்ற இவர் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்து இக்கல்லூரியைக் கட்டியெழுப்புவதற்கு மூலகாரணமாக இருந்தவர். இங்கு க.பொ.த உயர்தரம் வரை வகுப்புக்கள் நடைபெறுவதுடன் தொழில்நுட்பப் பிரிவும் உண்டு. திரு எம்.எஸ்.சினித்தம்பி அவர்கள் ஒரு சமாதான நீதவானும் ஆவர். நலிந்த மக்களின் நல்வாழ்வுக்காகச் சமூகசேவையில் பெரிதும் ஈடுபட்டுள்ளார்.

திரு. எம். எஸ். சினித்தம்பி அவர்கள் சமூக சேவை ஸ்தாபனமாகிய வதிரி அபிவிருத்தி நிறுவனம், அதன் இணைச்சேவையான நூலகசேவைகள் சபை, வதிரி முதிர்ந்த விவசாயிகள் கழகம், வதிரி இளம் கால்நடை விவசாயிகள் கழகம், வதிரி ஐக்கிய நாணய சங்கம் முதலியவற்றின் ஸ்தாபகரானவர். கரவெட்டி பிரஜைகள் குழு. வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் என்பவற்றின் உபதலைவராகவும் உடுப்பிட்டி வல்லை கூட்டுறவு வைத்தியசாலை நிருவாகக் குழு அங்கத்தவராகவும் பதவி வகிக்கின்றார்.


சமூக பொருளாதார ஆய்வு சம்பந்தமான திட்டங்களை ஏனைய பின்தங்கிய மக்கள் வாழும் பகுதிகளுக்கும் அறிமுகம் செய்ய முயன்று கொண்டிருக்கின்றார். இவருக்குக் 'கற்பகம்' தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல 12

வாசகர்களின் கோரிக்கைக்கு இணங்க மீண்டும் இவ்விதழில் குறுக்கெழுத்துப் போட்டி இல- 12 ஐப் பிரசுரிக்கின்றோம்.




## இடமிருந்து வலம்:

(1) மனிதன் கல்லினுற் செய்த ஆயுதங்களைப் பயன் படுத்திய காலம்.

(4) பனை ஆராய்ச்சி நிலையம் அமையவுள்ள இடம். அண்மையில் அதற்கான அடிக்கல் இங்கு நாட்டப்பட்டது.

(5) பௌத்த தூபி அமைந்திருப்பதனுல் பிரசித்தி பெற்ற இடம். இந்தியாவிலுள்ளது.

(7) போரை இப்படியும் சொல்லலாம்.

(10) பழைய காலத்தில் ஏடாகப் பயன்பட்ட பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலிருந்து கீழ்:

(1) கற்காலத்தின் கல்லாயுதங்கள் இலங்கையில் பல இடங்களிலுமுள்ள இவற்றிலிருந்து பெறப்பட்டன.

(2) பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிலொன்று.

(3) பிலிப்பைன்ஸ் தீவுகளில் பிஞா என்ற ஆடை நாங்கள் உண்ணும் ஒரு பழமரத்தின் நாரிலிருந்தே நெய்யப்படுகிறது அந்த நாரையுடைய மரம்.

(6) யோர்டான் நாணயம் இது

(8) தன்னை வளர்ப்பவனையே காலால் மிதித்துக் கொல்லும் மிருகம் இது.

(9) கரும்பு இங்கே தான் சாறுகிறது.

(11) கடலுக்கு இப்படியும் பெயர் (மாறியுள்ளது)

## நிபந்தனைகள்

- விடைகள், தரப்பட்ட கூப்பன்களில் நிரப்பப்பட்டு ஆசிரியர், 'கற்பகம்' 330. கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- பரிசு பெற்றவர் விபரம் அடுத்த மாதக் 'கற்பகம்' இதழில் வெளியிடப்படும்.
- முதற் பரிசு ரூபா 25/-, 2ம் பரிசு ரூபா 15/-, 3ம் பரிசு ரூபா 10/- பரிசுகள் யாவும் போட்டி முடிவுகள் வெளியானதும் அனுப்பி வைக்கப்படும். அரியாலை தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இப்பரிசுகளை வழங்குகின்றனர்.
- கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல. 12" எனக் குறிப்பிடல் வேண்டும்.
- உங்கள் விடைகளை உடனே அனுப்பிவையுங்கள்.

பெயர்..........................................................................

விலாசம்......................................................................

..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 11 விடைகள்

இடமிருந்து வலம்: (1) இயக்கர் (2) வனம் (4) பன் (7) பகை (8) பாவலன் (9) ஏரி (11) ஏணி

மேலிருந்து கீழ்: (1) இராவணன் (3) கரு (5) புன்னகை (6) வெல்லம் (8) பாரி (10) பாணி

## பரிசு பெறுவோர் விபரம்:

1ம் பரிசு 25/- ச. இராசகோபால், புகையிரத வீதி, மல்லாகம்
2ம் பரிசு 15/- வே. தேவராசா, சாயுடை, மாவிட்டபுரம் தெல்லிப்பழை
3ம் பரிசு 10/- செல்வி கே. தவம் வசந்தபுரம், இளவாலை.

---

## ரயில் சிரிப்பு

ராமு: யாழ்தேவி அடிக்கடி விபத்துக்குள்ளாகிறது. என்னுடைய புதிய கண்டு பிடிப்பை நடைமுறைப்படுத்தினல் ரயில் விபத்தே இருக்காது.

கோபு: என்ன அது?

ராமு: ரயில்கள் எல்லாம் நின்ற இடத்திலேயே நிற்க வேண்டும். ஸ்ரேஷன்கள் மட்டும் ஊர் ஊராக நகர்ந்து போய்க் கொண்டிருக்க வேண்டும்.

கோபு: ............?...............?.........?

❋ ❋ ❋

1ம் நபர்: எங்கடை ஊரிலே நிகழ்ந்த ரயில் விபத்துச் சம்பந்தமாக உங்களை ஏன் பொலிஸ்காரர் தேடித் திரிந்தவர்கள்

2ம் நபர்: என்னுடைய சைக்கிள் மோதித்தானே ரயில் கவிழ்ந்தது.

1ம் நபர்: ............?.........?.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று செய்தி நாளை வரலாறு

## பங்குனி 1986

**4.** இலங்கை இந்திய உறவு பாதிப்படைந்தே தீரும்.

—நாடாளுமன்றத்தில் ரிரேஜன் பெர்னாண்டோ

**6.** தமிழினம் பழிவாங்கப் படுகிறது. கொலைகள், சித்திரவதைகள், அதிகரிப்பு. முப்படையினரும் தமிழரைக் கொன்று குவிக்கின்றனர்.

—ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜீ. எஸ். திவான்.

**7.** தீவிரவாதிகளுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிதி உதவுகிறது.

அனுரா பண்டாரநாயக்கா

**8.** நொண்டிச் சாட்டு வேண்டாம். உங்கள் உள்நோக்கம் புரிகிறது.

—ரொமேஷ் பண்டாரி

**15.** இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

—பாரதப் பிரதமரிடம் எதிர்க் கட்சிகள்

**18.** வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு "யூனியன் கவுன்சில்" அமைக்க அரசு யோசனை.

**20.** அவசரகாலச் சட்டத்தை நீக்கினால் இராணுவ முகாம்களை வடக்கில் மூட வேண்டும்.

—லலித்

**21.** கோட்டை, காரைநகர், தொண்டமனாறு, நாவற்குழி ஆகிய நான்கு முகாம்களிலிருந்தும் தொடராக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் மக்கள் பீதியும் பதற்றமும். சிலர் மரணம்; பலர் காயம்.

**22.** இனப்பிரச்சினை தீராவிடில் இலங்கை பெரும் சிக்கலில் மாள நேரிடும்.

—பாரத அமைச்சர் நாராயணன்

**23.** வேலை நிறுத்தம் செய்த ஐக்கிய தாதிமார் சங்கம் தடை செய்யப்பட்டது.

❀ பிரபல ஈழத்து எழுத்தாளரும், நாவலாசிரியருமான திரு. கே. டானியல் காலமானார்.

**24.** இனப்படுகொலை நிற்கும் வரை இலங்கை அரசுடன் பேச்சு இல்லை.

—பாரதப்பிரதமர் ராஜீவ்

**25.** யாழ்தேவி ரயில் ரம்பைக்குளத்தில் குண்டு வைத்து முற்றாக தகர்ப்பு

**27.** பெப்ரவரி மாதச் சம்பளம் வழங்காததால் யாழ். மாவட்டத்தில் பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

**30.** வடபகுதி இராணுவமுகாம் பகுதிகளிலிருந்து பொது மக்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

**31.** வடகிழக்கு கடலில் மூன்று கப்பல்கள் மர்மமான முறையில் நடமாட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் செய்திகள் ஏப்ரல் 1986

## வாரப்பதநீர் முறை ஒழிப்பு தொழிலாளர் போராட்டம் வெற்றி!

தெல்லிப்பழை தெ. ப. பொ. கூ. சங்கத்தின் எல்லைப் பரப்புக்குள் உள்ள கூவில்-சேந்தான் குளம் ஆகிய கிராமங்களில் சீவல் தொழில் செய்பவர்கள் இதுவரை காலமும் மரச் சொந்தக்காரர்களுக்கு கொடுத்துவந்த வாரக் கருப்பனீர் முறையை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் வெற்றி பெற்றுள்ளதாக மேற்படி இடங்களில் சீவல் தொழிலாளரின் நலன் கருதி அமைக்கப் பட்டுள்ள சீவல் தொழிலாளர் நலன்புரி ஒன்றியம் கற்பகத்துக்குத் தெரிவித்துள்ளது.

அதாவது இதுவரை காலமும் சீவப்படும் பனைகளிலிருந்து பெறப்படும் கருப்ப நீர் ஒரு நாளைக்கு சீவல் தொழிலாளிக்கும், மறுநாள் மரச் சொந்தக்கார

(37 ம் பக்கம்பார்க்க)

## புதிய நிர்வாக சபை

அளவெட்டி மல்லாகம் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1986 – 3 – 02 ல் சங்கத்தலைவர் திரு. செ. முருகேசு தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளை, சமாசத்தலைவர் திரு.ச. சிவலிங்கம், சமாச பொது முகாமையாளர் திரு. ஆ. ந. இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். 1986 – ம் ஆண்டுக்கான நிர்வாகசபைத் தெரிவின் போது புதிய தலைவராக திரு. தே. மதுரநாயகமும், உபதலைவராக திரு. சு. சதாசிவமும் செயலாளராக திரு. க. வ. சின்னையா

(37 ம் பக்கம் பார்க்க)

## பளையில் சாராய வடிசாலை

பளையில் பனங்களிலிருந்து சாராயம் வடிக்கும் தொழிற்சாலை தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளது. இதனால் பளைப்பகுதியில் நாளாந்தம் மீதமாகி வரும் கள் வீணாக நிலத்தில் ஊற்றப்படுவது தவிர்க்கப்படுகிறது.

பச்சிலைப் பள்ளி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் இச் சாராய வடிசாலையை நிர்வகித்து வருகின்றது.

**வாரப் பதநீர்...**

(36ம் பக்கத் தொடர்)

ருக்கும் என்ற நடைமுறை இருந்து வந்துள்ளது.

நாற்பது முழப்பனையில் எந்தப் பாதுகாப்புமின்றி உயிரைப் பணயம் வைத்து காலை மாலை என்று இரண்டு வேளையும் ஏறி இறங்கும் தொழிலாளியின் உழைப்பின் ஒரு பகுதியை உடல் உழைப்பற்ற ஒரு கூட்டம் சும்மா இருந்து அனுபவித்து வந்துள்ளது. அத்துடன் ஒரு ஏழை சீவல் தொழிலாளி இந்த முறைக் கருப்பநீரை உடனுக்குடன் விற்றோ அல்லது பனங்கட்டியாக்கியோ தான் ஜீவனோபாயத்தை நடத்த வேண்டிய நிலையுள்ளது. அப்படிப் பார்க்கும் போது ஒன்றை விட்ட ஒருநாள் அவனும் அவனது குடும்பமும் முழுப்பட்டினியாக கிடக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஆனால் மரச்சொந்தக் காரரோ தனது முறைக் கருப்பனீரை பனங்கட்டியாக்கி அதைப் பாதுகாத்து வைத்து நல்ல விலையுள்ள காலத்தில் விற்று கொள்ளை இலாபமும் ஈட்டுகிறார்கள். மூலப் பொருளினை உற்பத்தி செய்த இந்தச் சீவல் தொழிலாளியே சில வேளைகளில் அவர்களிடம் கூடுதல் பணம் கொடுத்து பனங்கட்டியை வாங்க வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படுகிறது. இது பாய் பின்னுபவன் வீட்டில் படுக்கப் பாய் இல்லை என்ற கதையை ஞாபகப் படுத்துகிறது

ஆகவே சீவல் தொழிலாளரைப் பாதித்து வந்துள்ள இந்த நடைமுறையை எதிர்த்து நாம் மேற்கொண்ட நடவடிக்கை மரச் சொந்தக் காரர்களையும் தொழிலாளர்களையும் ஒரு புரிந்துணர்வு பேச்சுவார்த்தையில் சந்திக்க வைத்தது. இதன்மூலம் இப்பிரச்சினைக்குத்ீர்வு காணப் பட்டுள்ளது.

அதாவது வாரக் கருப்பனீர் கொடுப்பனவுமுறைக்குப் பதிலாகபத்துபனைகளுக்கு உட்பட்ட இடத்து தொழிலாளிக்கு இரண்டு நாளும் மரச் சொந்தக்காரருக்கு ஒருநாளும் கருப்பநீர் உரியதெனமுடிவாகி பத்து பனைகளுக்கு மேற்பட்ட இடத்து முதலாவது நடைமுறையுடன் மேலதிக பனைக்கு குத்தகை அடிப்படையில் பணம் செலுத்துவதென்றும் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஒன்றியம் கற்பகத்திடம் தெரிவித்துள்ளது,

பல்லாண்டு காலமாக நிலவிவந்த இந்த அடிமை குடிமை முறை முடிவுறுத்தப் பட்டமையை இட்டு கற்பகம் மகிழ்வடைகிறது. இந்த முடிவை அடைய உதவிய ஒன்றியத்தினரை தொழிலாளர்கள் நன்றியுடன் பாராட்டுகின்றார்கள்.

---

(36ம் பக்கத் தொடர்)

**புதிய நிர்வாக...**

வும் தெரிவு செய்யப் பட்டனர். மற்றும் இயக்குனர் சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் மா. தவத்துரை, செ. தம்பித்துரை, சு. ஈஸ்வரதாஸ், சி. சிவலிங்கநாதன், லா. அல்போன்ஸ் செ. முருகேசு ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் டானியலுக்கு அஞ்சலி

இலங்கையின் தலைசிறந்த தமிழ் இலக்கிய கர்த்தா, திரு. கே. டானியல் அவர்களின் மறைவு பலரை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. ஒரு சிறந்த இலக்கியகர்த்தா சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற படைப்பாளி மறைந்தார் என்று அதிர்ச்சியடைந்தவர்களைவிட ஒடுக்கப்பட்ட மக்களின் அடக்குமுறைக்கு எதிரான விசுவாசமான போராளி ஒருவர் மறைந்தார் என்று அதிர்ந்தவர்கள் பலராவர்.



திரு. டானியல் தனது பொது வாழ்வை அடக்குமுறைக்கெதிரான ஒரு போராளியாக ஆரம்பித்தார். ஆலயங்களில், பாடசாலைகளில், பொது இடங்களில் ஏன் மயானங்களில் கூட காட்டப்பட்ட வேற்றுமைகளுக்கு எதிரான போராட்டங்களில் முனைப்புடன் பங்குபற்றினார். அப்படியான போராட்டங்களை முன்னின்று நடத்தினார். தனது பேச்சாலும், எழுத்தாலும் கிராமங்களிலே தாம் அடக்கப்படுகின்றோம்; ஒடுக்கப்படுகின்றோம் என்று அறியாது நடைப்பிணங்களாக, அடிமைகளாக இருந்த மக்கள் கூட்டத்தை தட்டி எழுப்பி அடக்குமுறைகளை உடைக்கப் போராட வைத்தார்.

அடக்குமுறைகள், அடிமைத்தளைகள் அறுத்தெறியப்பட வேண்டியவையே அன்றி சாதுவாக அறக்கூடியவை அல்ல என்ற அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர். திரு டானியல் அவர்கள் இன்றுகூட முற்றாக மறைந்துவிடாது நீறுபூத்த நெருப்பாயிருக்கும் சாதி என்ற வியாதியின் நவீன தாக்கங்களை தனது நாவல்கள் மூலம் வெளிக்கொணர்ந்தார்.

திரு. டானியல் தனது கதைகளிலும் நாவல்களிலும் உண்மைச் சம்பவங்களையே புகுத்தி சமுதாயத்தின் கொடுக்கேடுகளை புட்டுக்காட்டினார். ஆரம்பமுதல் இறுதிவரை தான் கொண்ட கொள்கையில் மாறுபடாது உழைத்து மறைந்துள்ளார்.

திரு. டானியல் அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகத்திற்கு பேரிழப்பு. ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்கு விழுந்த பேரிடி அன்னாரின் இழப்பால் துயருறும் சகலருடனும், உடன் பிறப்பொன்றை இழந்த மன உணர்வுடன் நாமும் சேர்ந்து கொள்கிறோம்.

எமது ஆழ்ந்த அஞ்சலிகளை அன்னாரின் காலடியில் சமர்ப்பிக்கிறோம்.

“ வாழ்க டானியலின் நாமம்
வளர்க அவர்தம் இலட்சியம் ”

*(மதுராந்தகன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி நினைவு

அண்மையில் அமரரான பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் மீது எவ்வளவு 'காதல்' கொண்டிருந்தாரோ அது போன்று பனையின் மீதும் அதிக பிரேமை கொண்டவராக விளங்கினார். பண்டிதமணி அவர்கள் 11-10-1974ம் திகதி இந்து சாதனம்' இதழில் எழுதிய கட்டுரை ஒன்றிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.



## பனை தரும் வேண்டுகோள்

அன்பர்களே! பனைத்தெய்வம்- பனைத்தாய் சொல்லுவதைக் கேட்போமாக. அதுபின்வருமாறு:

"கடவுள் என்னைச் சிருஷ்டித்துப் பூலோக கற்பக தரு என்ற சிறப்புப் பெயரையுஞ்சூட்டிப் பரம ஏழைகள் தொடக்கம் மகாமேதைகள் பரியந்தம் யாவர்க்கும் பயன் செய்வாயாக என்று என்னை இம்மண்ணுலகிற்கு அனுப்பிவைத்தருளினார்."

மனிதர்களே! உங்கள் முன்னோர் என்னை வரவேற்று என் விதைகள் மூலம் என்னை எங்கும் உண்டு பண்ணி நூற்றுக்குமேற்பட்ட, விலை மதித்தற்கரிய பயனைப் பெற்றூர்கள்.

இடையிலே அந்நிய அநாகரிகம் குடிபுகுந்து அநேகர் என்னைப் புறக்கணித்தார்கள். இழித்தும் உரைத்தார்கள். அம்மட்டேயோ? பலவாறு அழிவுஞ் செய்தார்கள். அந்தோ! கண்ணீர் வரவும் செய்தார்கள்.

என்னை உண்டு பண்ணுவதை நிறுத்தியும் விட்டார்கள்! மக்காள்! உங்கள் முன்னோரின் சாபத்திற்கு ஆளாகாதீர்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டிய தென்புலக்கடன் உங்களுக்கு உண்டு.

"மூவேழ் சுற்றமும் முரணுறு நரகிடை
ஆழாமே அருள் அரசே போற்றி"

என்பது திருவாசகம். தந்தைவழி, தாய்வழி, 3ம் வழி ஆகிய இறந்த சுற்றமும் இனி வரும் சுற்றமும் ஆகிய இருபத்தொரு தலைமுறை உய்வதற்கு வழி பிறந்திருக்கிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குறுதி

குட்டிக் கதை

ஒருவன் சாகக் கிடக்கும் தறுவாயில் மனைவியிடம் சொன்னான்:–

"என் மேசையில் ஒரு சிவப்பு மெழுகுவர்த்தி இருக்கிறது. அது பெரிய பாதிரியார் ஆசிர்வாதத்தைப் பெற்றது. அது இருக்கும்வரை நீ மறுமணம் பண்ணிக் கொள்வதில்லை என்று சத்தியம் செய்து கொடு"

அவ்விதமே அவள் சத்தியம் செய்து கொடுத்தாள். அவனும் செத்துப் போனான். அவள் சவப்பெட்டி அருகில் போய்த் தன் கையில் அந்தச் சிவப்பு மெழுகுவர்த்தியைக் கொழுத்தி வைத்துக் கொண்டு அது முழுவதும் எரிந்து கரையும் வரையில் நின்றுகொண்டிருந்தாள்.

அம்பிரோஸ் பியர்ஸ்


உங்கள் இல்லத்திற்கு வரும்
விருந்தினர்களைவரவேற்று உபசரிக்க
இனிய வைபவங்கள் சிறக்க
எம்மை நாடுங்கள்

இரும்புக் கதிரைகள் வாங்குகள்

எவர்சில்வர் றே

குறைந்த வாடகை! நிறைந்த பயன்!

அரியாலை தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

இல. 15, நடுத்தெரு லேன்,
கண்டி வீதி. அரியாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனம் பொருள் உற்பத்தியாளர்களுக்கு
## இலவச ஊக்குவிப்பு உதவிகள்

# PALMYRAH
# SAUCE





பனம் பழத்தை மூலப் பொருளாகக் கொண்ட பனாட்டு, சிரப், பனம்பானம், கோடியல், சோஸ், ஜாம் போன்ற உற்பத்திகளை மேற்கொள்ளுபவர்களுக்கு வேண்டிய ஊக்குவிப்பு உதவிகளை இலவசமாக வழங்க பனை அபிவிருத்திச் சபை முன்வந்துள்ளது.

**பனம் பொருள் உற்பத்தியாளர்களே!**
**இலவச ஆலோசனைகளுக்கும்,**
**தொழில்நுட்ப உதவிகளுக்கும்,**
**எம்மை நாடுங்கள்!**

## பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22801 22094

ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org